பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
♦ விரைவானது ♦ பாதுகாப்பானது ♦ நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
☞ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
☞ வங்கிக்கணக்கு அவசியமில்லை
☞ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
☞ 365 நாள் சேவை
☞ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 222 7310, 021 222 7555, 021 222 7560
Fax 021 222 7310
E-mail: thirumurugan@eudoramail.com

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 31 | ஞாயிற்றுக்கிழமை | (13.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 177

## பேச்சுவார்த்தைக்குத் தயார்

# இடைக்கால நிர்வாக சபையை புலிகளிடம் வழங்குவது அவசியம்

## நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி

(நமது நிருபர்)



**இலங்கையின் ஆட்புலம், இறைமை ஆகியவற்றின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் வடக்குக் கிழக்கிற்கான தன்னாட்சி அதிகாரமுடைய இடைக்கால நிர்வாக சபை குறித்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்றிரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிராக எதிரணிக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான முடிபினை மேற்கொண்டுள்ள நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்றிரவு நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சி மூலம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத் தொலைக்காட்சி உரையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தற்போதைய அரசியல் சூழ்நிலையிலும், வடக்குக் கிழக்கிற்கான அபிவிருத்தி வேலைகளுக்கும் இடைக்கால நிர்வாக சபை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற அவசியத்தை அரசாங்கம் நன்குணர்ந்துள்ளது. இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான இறுதித் தீர்வொன்றைக் காண வேண்டுமென்ற முக்கிய நோக்கத்தின் அடிப்படையிலேயே பேச்சுவார்தகை ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது.

இதன் அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து சமாதான முயற்சி தொடர்பான அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திக் கூறியுள்ளேன்.

இனப்பிரச்சினைக்கு இறுதித்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற அங்கீகாரம் இன்றி இடைக்கால நிர்வாகம் அமுலாகுமா?

### சந்தேகம் எழுப்புகிறார் அரசியல் ஆய்வாளர் ஜெயராஜ்

(லண்டன்)

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகம் குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டாலும் பாராளுமன்ற அங்கீகாரம் இன்றி அதனை அமுல்படுத்த முடியுமா என்பது பெரும் கேள்விக் குறியாகவே இருப்பதாக கனடாவில் வசிக்கும் பிரபல அரசியல் ஆய்வாளர் டி.வி.எஸ்.ஜெயராஜ் தெரிவித்திருக்கிறார்.

நேற்றிரவு லண்டன் பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தச் சந்தேகத்தை வெளியிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து ஜனாதிபதி சந்திரிகா முக்கியமான நிர்ப்பந்தத்திற்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பாக கிளி.இல் இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டம் ஒன்று இன்று கிளிநொச்சி தமிழீழ கல்விக் கழக நடுவப் பணிமனையில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

2004ஆம் ஆண்டிற்கான கல்வி சார் நடவடிக்கைகள் சம்பந்தமான தீர்மானங்கள் இதில் எடுக்கபட விருப்பதனால் சகல கல்விப் பணிப்பாளர்கள், அபிவிருத்தித் திட்டமிடல், நிர்வாக உதவிக் கல்விப் பாணிப்பாளர்கள், இலங்கை தமிழ ராசிரியர் சங்க உறுப்பினர்கள், கணக்காளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(உ-19)

## இ.தொ.காவின் ஆதரவைப் பெற மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகும்

### அமைச்சர் பிரேம் ஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்வது குறித்த உத்தியோக பூர்வமான பேச்சுவார்த்தைகள் அடுத்த சில தினங்களுக்குள் ஆரம்பிக்கப்படுமென மின் சக்தி எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக வெளிவரும் செய்தி குறித்து ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இத

(10ஆம் பக்கம் பார்க்க)

## அக்மீமன தேரர் பதவியேற்க நீதிமன்றத் தடை நீடிப்பு

(கொழும்பு)

வண.அக்மீமன தயாரத்ன பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்வதற்கான தடையுத்தரவினை எதிர்வரும் யூன் 25 வரை கொழும்பு மாவட்ட நீதிபதி எஸ்.சமரக்கோன் நீடித்துள்ளார்.

இத்தடையுத்தரவு முன்னர் யூன் 4வரை விதிக்கப்பட்டிருந்தது. ஹத்தலுவே ரத்னசீல தேரர் இராஜினாமாச் செய்ததையடுத்து அவரின் இடத்திற்கு அக்மீமன தேரர் நியமிக்கப்பட்டார்.

தொடர்ந்து அக்மீமன தேரர் பாராளுமன்ற உறுப்பினராக சத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.அதிகாரிகளின் யாழ்.விஜயம் ரத்து

(கொழும்பு)

நேற்று யாழ்ப்பாணம் வரவிருந்த அமெரிக்க உயர் அதிகாரிகள் குழு தமது யாழ்.விஜயத்தைத் திடீரென ரத்துச் செய்துள்ளது.

இதனால் அவர்களைச் சந்திப்பதற்காக யாழ்.செயலகத்திற்கு வருகை தந்திருந்த உயர் அதிகாரிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இராஜாங்கத் திணைக்களம், தூதரக அதிகாரிகள் குழு

(10ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.கொட்டடிப் பகுதியில்.
தண்ணீருக்காக ஏங்கும் பாலகன்.
உள்ளே ஊர்த் தரிசனம். (படம்:பவன்)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பலாலி விமானத் தளத்திற்கு ஏகபோக உரிமை கொண்டாட இந்தியா முயற்சி

(புதுடில்லி)

பலாலி விமானத்தளத்தைத் திருத்தி சீரமைத்துக் கொடுப்பதற்கு இந்தியா முன்வந்திருப்பதாக மீண்டும் தகவல் வெளியாகி இருக்கின்றது.

400 கோடி இந்திய ரூபா செலவில் இந்தப் பணிகளை முடித்துத் தருவதற்கு இணங்கியுள்ள இந்திய அரசாங்கம், சிறிலங்கா விமானப் படையைத் தவிர வேறு எந்த அரசோ, விமான நிறுவனமோ இந்த விமானத் தளத்தை உபயோகிக்கக் கூடாதென நிபந்தனை விதித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவியிலிருந்த காலத்திலேயே இந்த யோசனை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இந்தியாவின் நிபந்தனை காரணமாக அது முன்னெடுக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் புதுடில்லிக்குப் போயிருந்த சமயம் மீண்டும் இந்த யோசனை பரிசீலனைக்கு வந்ததாக அறியப்படுகின்றது. இவ்விமான நிலையத்தின் மீதான இலங்கையின் இறைமையை இந்தியா மறுக்காது போனாலும் ஏதோ ஒருவகையில் அதன் மீது தனக்கு கட்டுப்பாடு இருக்க வேண்டும் எனக் கருதுவதாகவும் இந்த விமான நிலையத்தை எதிர்காலத்தில் வேறு நாடுகளின் பயன்பாட்டுக்கு அரசாங்கம் விட்டுக்கொடுக்கக் கூடும் என்று இந்தியா அஞ்சுவதாகத் தெரிகின்றது.

(உ)

# வேலைவாய்ப்பு என்ற பெயரில் மக்கள் மீது பலம்சுமத்தப் போவதில்லை

## பிரதி நிதிஅமைச்சர்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பை உறுதி செய்யும் அரசாங்கத்தின் திட்டத்திற்காக மக்கள் மீது அநாவசியமான சுமைகளை ஏற்படுத்தப் போவதில்லை என பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய உறுதியளித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டத்திற்கு கடந்த ஆண்டில் சில திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டு செலவிடப்படாத நிதியே பயனபடுத்தப்படும்.

அரசாங்க நிறுவனங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரபபும் வகையில் பட்டதாரிகள் நியமிக்கப்படுவார்கள். நியமனத் திகதியில் இருந்து இரண்டு வருட கால தகுதி காண் காலப்பகுதியாக கணிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (உ-60,10)

# மட்டு. ஏறாவூரில் வெள்ளை வான் பீதி

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பற்றுப் பகுதியில் சில தினங்களாக இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வான் திரிவதால் பொது மக்கள் மிகுந்த அச்சமும் பீதியும் கொண்டுள்ளனர்.

இதேவேளை வந்தாறுமூலை, பலாச்சோலை, களுவன்கேணி, கொம்மாதுறை, மாவடிவேம்பு போன்ற கிராமங்களில் இரவு வேளைகளில் இனந்தெரியாத நபர்கள் சிலர் பொது மக்களின் வீடுகளுக்குச் சென்று கதவுகளைத் தட்டி வருவதுடன், கோழிகளையும் திருடி வருகின்றனர்.

இந்நடவடிக்கை காரணமாக பொதுமக்கள் இரவு நேரங்களில் தமது கடமைகளை குறுகிய நேரத்திற்குள் முடக்கி விட்டு மிகுந்த அச்சமும் பீதியும் கொண்ட சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

(உ)



இலங்கையில் கண்ணி வெடிகள் ஏராளமாக புதைக்கப்பட்டுள்ளன. இதை அகற்றுவதற்காக அமெரிக்காவின் வைவோமிங் நகர மாணவர்கள் 14 ஆயிரம் டாலர் திரட்டி ஒரு நாயை விலைக்கு வாங்கி, கண்ணி வெடியைக் கண்டறியும் பயிற்சியும் அளித்து இலங்கைக்கு அனுப்பிவைத்தனர். வைவோமிங் எனப் பெயரிடப்பட்ட அந்த நாய், இலங்கையில் இராணுவ பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை முடித்து பட்டமும் வாங்கி விட்டது.

# துப்பாக்கி தயாரித்த கிராமவாசி கைது

(கொழும்பு)

சட்ட விரோதமாக துப்பாக்கிகளைத் தயாரித்து வந்த கிராமவாசி ஒருவரை மாத்தளைப் பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

அத்துடன்,மேற்படி நபரிடம் இருந்து துப்பாக்கிகளைத் தயாரிப்பதற்கான உதிரிப்பாகஙகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேற்படி நபர் நீண்டகாலமாகவே பெருமளவு துப்பாக்கிகளைத் தயாரித்து நாட்டின் பல பிரதேசங்களிலும் விற்பனை செய்து வந்தமை பொலிஸார் மேற் கொண்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

(உ-60,10)

# அரசியல் பழிவாங்கல்களை ஆராய்வதற்குக் குழு

(கொழும்பு)

சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் பணியாளர்கள் மீதான அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்க குழு ஒன்று நியமிக கப்படவுள்ளது.

கைத்தொழில் பிரதி அமைச்சர் சுனில் ஹந்துன்ன தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவில் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர், சட்டவல்லுநர்கள் ஆகியோர் அங்கத்துவம் வகிப்பர்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கீழ் பணியாற்றி வருபவர்கள் மீது புரியப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராய்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதை நோக்காகக் கொண்டு இக்குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

(உ-4,64)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்கு நீதிபதி

## விக்னராஜாவின் பெயர் சிபார்சு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவிக்கு மேல் முறையீட்டு நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி கே.விக்னராஜாவின் பெயர் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக அரசியல் அமைப்புப் பேரவையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவரது பெயரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு விதந்துரைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவி வெற்றிடமானதால் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் அவை செயற்படாதிருப்பது தெரிந்ததே. (உ-60,10)


# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று மு.ப.11 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தேசிய தடகள விளையாட்டுப் போட்டிகள் பற்றிய முக்கிய தீர்மானம் எடுக்கப் படவிருப்பதால், அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

(உ-19)



பருத்தித்துறை இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் நடமாடும் நூலக சேவைக்கென இந்திய உயர் ஸ்தானிகராலயம் அண்மையில் வாகனம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியிருந்தது. இவ் வாகனக் கையேற்பு நிகழ்வில் சுவாமி சித்ரூபானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனுக்கு நூலொன்றைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# வேலைக்கு அமர்த்தப்படும் சிறுமிகள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகின்றனர்

## ஐ.நா. அறிக்கையில் சுட்டிக்காட்டு

(லண்டன்)

தெற்காசிய நாடுகளிலேயே அதிகமான சிறுவர்கள் வீட்டுவேலைக்காக அமர்த்தப்படுகின்றதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் கவலை தெரிவித்துள்ளது.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிரான சர்வதேச தினம் இன்றாகும்.

இதனை முன்னிட்டு ஐ.நா. சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அனைத்து நாடுகளும் சிறுவர்களுக்கான கல்வி,சுகாதார, அபிவிருத்தி உரிமைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும்.

ஆனால் உலகெங்கிலும் வீட்டு வேலைக்காரர்களாக ஈடுபடுத்தப்படும் இலட்சக்கணக்கான சிறுவர்களைப் பொறுத்தமட்டில் சிறுவர் தொழில் பாதுகாப்புச் சட்டங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

அத்துடன், வீட்டு வேலைகளுக்காக அமர்த்தப்படும் பெருமளவு சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-60,10)

# மிதிவெடி அகற்றும் பயிற்சியை மற்றுமோர் குழு முடித்தது

(கொழும்பு)

நிலக் கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பான பயிற்சிகளை பூர்த்தி செய்த மற்றுமொரு இராணுவ வீரர்கள் குழு கடமையில் இணைந்துள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பயிற்சியை முடித்துக் கொண்ட இராணுவ வீரர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் எம்பிலிப்பிட்டியாவில் உள்ள இராணுவ பொறியியல் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வன்னிப் பிரதேசத்திற்குப் பொறுப்பான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் வி.எஸ்.கே விஜயசூரிய பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கண்ணிவெடி அகற்றுவதற்கான பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய இராணுவ வீரர்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இதுவரையும் கண்ணிவெடி அகற்றப்படாத பிரதேசங்களில் உள்ள நிலக் கண்ணிகளை அகற்றவுள்ளனர்.

(உ-60,10)

# தணியாத தாகமாகிவிட்ட தண்ணீர்ப் பிரச்சினை!

## ஊர்த் தரிசனம் 5

யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ள குடிசன அடர்த்தியும், அத்தியாவசிய நெருக்கடியும் முன் எப்போதும் இல்லாத நெருக்கடி நிலையை உருவாக்கியுள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாண மேற்குக் கரையோரப் பிரதேசங்களாகிய கொட்டடி, நாவாந்துறைப் பிரதேசக் குடியேற்றத் திட்டங்களில் இன்று எதிர்நோக்குகின்ற பல நெருக்கடிகளில் மிகவும் தணியாத தாகமாக இந்த 'நன்னீர் வழங்கல்' அமைந்துள்ளது.

### குடியேற்றத் திட்ட உருவாக்கம்

இக்கரையோரப் பிரதேசங்களில் எவ்வாறு குடியேற்றத் திட்டங்கள் உருவாகின என நாம் முதலில் நோக்குகையில், சதுப்பு நில மீட்பு என்னும் பெயரில் குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவதற்கெனவும், விறகுத் தேவை



அடிப்படை வசதிகளற்ற கண்ணாபுரக் குடியேற்றம்

களைப் பூர்த்தி செய்வதற்கெனவும் குடாநாட்டின் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டு விட்டன. இவ்வாறு அழிக்கப்பட்ட காடுகளில் கண்ணாக் காடுகளின் பெயரினால் "கண்ணா புரம்" என்ற குடியேற்றத் திட்டம் நாவாந்துறைப் பகுதியில் இப்போது காணப்படுகிறது. இது போல பல குடியேற்றத் திட்டங்கள், முத்தமிழ் கொலனி, மருதோண்டிக் காடு, சூரியவெள்ளி, வசந்தபுரம் போன்ற கிராமப்புறக் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டன.

நீர் தேங்கிக் கொப்பளித்த குளங்கள் பல புழுதிவாரித் தூர்ந்து போய்விட்டன. சதுப்பு நிலங்கள் மறைந்து பாளங்களாக வெடித்து முளைக்க ஆரம்பித்துள்ளன. கிணற்று நீரின் ஆழம் வரவரக் கீழிறங்கிக் கொண்டே போகின்றது. இவற்றுக்கெல்லாம் மேலாக, குடாநாட்டின் நன்னீர்க் கிணறுகள் சில



தண்ணீருக்காக தவம் கிடக்கும் குழாயடிக் குடங்கள்

உவர் நீர்க் கிணறுகளாக மாறி விட்டன. போராட்ட சூழ்நிலைகளினால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தற்காலிகமானவை. தாயக விடுதலையின் பின்னர் தணியக் கூடியவை. ஆனால், இப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள நன்னீருக்கான

தட்டுப்பாடு என்றுமே தணியாத தாகமாகிவிடும் போலுள்ளது.

பெரிய ஆறுகளோ, நீர்ப்பாசனக் குளங்களோ இல்லாத நிலையிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் செறிந்து வாழ்வதற்குக் காரணம் நிலத்தடி நீரேயாகும். இத் தரைக் கீழ் நீரானது உவர் நீரின் மேல் நன்னீர் வில்லைகளாக மிதந்து காணப்படுகின்றன. மாரி காலத்தில் தரைக்குக் கீழ் சேமிக்கப்படும் மழை நீரின் அளவுக்கு ஏற்ப விரிவடையும் இந்த நன்னீர் வில்லை கோடை காலத்தில் பாவனைக்காக வெளியேற்றப்படும் நீரின் அளவுக்கு ஏற்ப சுருங்கிக் கொள்கிறது.

### நிலத்தடி நீர்

குடாநாட்டின் அடித்தளம் புவிச்சரிவு வரலாற்றில் மயோசின் காலத்துக்குரிய சுண்ணாம்புப் பாறைகளையே கொண்டுள்ளது. இவை இடத்துக்கிடம் வேறுபட்ட தடிப்பங்களைக் கொண்டிருப்பதுடன் பண்புகளிலும் வேறுபடுகிறது. இயல்பாகவே முட்களையும், உடைவுகளையும் கொண்டுள்ள இப்பாறை, மழைநீரை உட்புகவிடக் கூடியதாகவும், கீழேயுள்ள பள்ளங்களிலும் குளங்களிலும் நீரைத் தேக்கி வைக்கக்கூடிய இயல்புடையதாகவும் காணப்படுகிறது. இவ்வாறு உட்புகுந்து தேங்கும் மழை நீரே நிலத்தடி நீராக உவர்நீரின் மேல நன்னீர் வில்லையாகக் காணப்படுகின்றது. இவ்வாறான தன்மையினை நாம் சதுப்பு நிலப்பகுதிகளில் காணமுடியாது. இதனால் இப்பிரதேச நிலக்கீழ் நீர் உவர்த் தன்மையாக அமைந்து விளங்குகிறது.

வரலாற்றுக் காலம் முதலாக மக்கள் செறிவாக வாழ்வதற்கும், செறிவான முறையில் விவசாயச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கும், இப்பிரதேசங்களில் குறைந்த ஆழத்தில் இலகுவாகப் பெறத்தக்கதாகவுள்ள தரைக்கீழ் நீர்வளமே பிரதான காரணமாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் சனத்தொகை குறைவாக இருந்த காலங்களில் நீரின் தேவையும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. தரைக்கீழ் நீரும் அளவாகவே பயன்படுத்தப்பட்டது. ஆனால், சனத்தொகை அதிகரிப்புடன் நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் வீதமும் அதிகரிக்கத் தொடங்கியது. தரிசாக விடப்பட்ட நிலங்கள் திருத்தப்பட்டு பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டன. முன்னோர்களால் நீர்ப்பாசனம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுவந்த துலாப்பட்டை முறைகள் இப்போது கைவிடப்பட்டு மிகக் குறுகிய நேரத்தில் பெருமளவு நிலத்தடி நீரை வெளியேற்றும் நீர்ப்பம்பிகளின் பாவனை அதிகரித்து வருகின்றது. இதன் மூலமும் பெருமளவு தரைக்கீழ் நீர்வெளியேற்றப்பட்டு வருகின்றது.

### குடாநாட்டின் மழைவீழ்ச்சி


அகற்றப்படும் அளவிற்கு தரைக்கீழ் நீர் மீளவும் சேமிக்கப்படவில்லை. தரைக்கீழ் நீரின் பிரதான மூலம் மழை நீரேயாகும். குடாநாட்டின் ஒரு வருட சராசரி மழைவீழ்ச்சி 47 அங்குலம். இதில் 32 அங்குலம் மாரி காலத்தில் கிடைக்கிறது. குடாநாட்டில் கிடைக்கும் மழை வீழ்ச்சியின் பரம்பல் ஒழுங்கற்றுக் காணப்படுவதுடன் வருடத்தின் சராசரி 60 நாட்கள் மாத்திரமே மழை நாட்களாகவும் காணப்படுகின்றன. நீர்வளம் பற்றிய குறைந்த அறிவு காரணமாகவே இப்பகுதி மக்கள், கிடைக்கும் சொற்ப மழை நீரையும், கடல் நீருடன் கலக்க அனுமதிக்கின்றனர். இதற்கான வடிகாலமைப்பு முறைகள் எதனையும் இக் குடியிருப்பாளர்கள் ஏற்படுத்தவில்லை. மேலும் குடியிருப்புக்காக மேற்பரப்பிலுள்ள பற்றை நிலங்கள் நிரவப்பட்டு, நிலம் மீட்சி செய்யப்பட்டுள்ளமையும் கடலைத்தேடி மழை நீர் ஓடுவதற்கான மேலதிக காரணங்களாக அமைகின்றன.

நிலத்தடி நீரானது அருகிவரும் அதேவேளை, நிலத்தடி நீரைக் குறித்த பிரதேசத்தில் முன்னரை விட அதிகளவு பயன்படுத்தும் நிலையும் உருவாகி வருகிறது. இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் இடம்பெயர்ந்து வெளியேறும் மக்கள் குடாநாட்டின் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலும் கரையோரக் குடியேற்றத் திட்டங்களிலும் செறிந்து வாழ்கின்றனர். குறுகிய நிலப்பரப்பில் வாழும் பெருமளவு மக்கள் தொகையினரால் மேலும் மேலும் நிலத்தடி நீர் சுருங்கி வருகிறது.

தரிசனம் :
கே.பிரபாகரன்
சமூகவியற்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

### குடிநீர்ப் பிரச்சினை

குடாநாட்டின் குடிநீர்ப் பிரச்சினை பற்றி அந்நியராட்சிக் காலத்திலேயே உணரப்பட்டுவிட்டது. முன் எச்சரிக்கை நடவடிக்கையாக யாம்பாணக் கடல்நீரேரிகளை நன்னீரேரிகளாக்கும் திட்டம் பற்றி பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே சிந்திக்கப்பட்டது. 1940 ஆம் ஆண்டளவில் க.பாலசிங்கம் என்பவர் குடாநாட்டின் கரையோரக் கடல் நீரேரிகளை நன்னீரேரிகளாக்கும் திட்டம் பற்றி அறிக்கையொன்றைத் தயாரித்து பிரித்தானிய அரசுக்கு வழங்கியிருந்தார். மகாவலியை வடக்கே திசை திருப்பும் திட்டமும் அப்போதே அதில் அடங்கியிருந்தது. இவரது திட்டத்தைத் தொடர்ந்து 1948இல் வெப் (webb) என்பவரது திட்ட அறிக்கை வெளியிடப்பட்டது. இது யாழ். கடனீரேரித் திட்டம் பற்றி ஓரளவு நடைமுறைச் சாத்தியமான அம்சங்களைப் பரிந்துரைத்திருந்தது.



குழாயில் நீர் வருமா? குழந்தையின் தாகத்தை தீர்க்க...

இவ்வாறாக தரைக்கீழ் நீர் மிக மோசமாக பயன்படுத்தப்பட்டதன் காரணமாகவே இன்று அதுவும் குறிப்பாக யாழ்.கரையோரப் பிரதேசங்களில் இந்த குடிநீர்ப்



பெயரளவிலே காணப்படும் கிணறுகள்

பிரச்சினை நில்வுகிறது. அதனைப போக்க நீர்ப்பாசனத் திட்ட அமைச்சு காலை 6.00 - 6.40 வரையும், மாலை 4.00-4.40 வரை என நேரவரையறையுடன் நீர் வழங்கல் நடைபெறுகிறது. இதற்காகப் போட்டிபோடும் மக்கள் திரள் தான் எவ்வளவு?

### குடிநீர் பற்றிய தீர்மானம்

குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சில தீர்மானங்களைப் பயனாளிகளுக்கு உருவாக்கிக் கொள்ள வேண்டும். அந்த வகையில் மக்கள் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கும், அதைப் பற்றி அறிந்திருப்பதற்கும் இடையேயுள்ள இடைவெளி குறைகபடும்போதே, குடாநாட்டின் நன்னீர் வளம் எதிர்நோக்கியிருக்கும் அச்சுறுத்தலிலிருந்து நாம் ஓரளவாவது விடுபட முடியும்.

மேலும், நிலத்தடி நீரானது என்றும் வற்றாத ஒரு வளமாகவே பலரால் கருத்தப்படுகிறது. நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கும் ஒரு கால எல்லை உண்டு என்பதை பலர் உணர முடியாதவர்களாகவே இன்னும் இருக்கிறார்கள். நிலத்தடி நீரைச் சரியான முறையில் பயன்படுத்தக் கூடிய வழிமுறைகளைப் பொது மக்களுக்கு அறியத் தருவதன் மூலமும், கடனீரேரிகளை நன்னீரேரிகளாக மாற்றும் திட்டத்தை விரைந்து செயற்படுத்துவதன் மூலமும் யாழ்ப்பாண ஒட்டு மொத்த சமூகத்தினதும், குறிப்பாக கரையோரப் பிரதேச குடியிருப்புகள் உட்பட அனைத்து சமூகத்தினரதும நன்னீருக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும். எனவே, அனைத்து நிறுவனப் பணியாளர்களும் இந்த நன்னீர் வழங்கல் நிறுவனங்கள் குறிப்பாக இது சார் விடயமான தகவல்களை மேலதிகாரிகளுடன் உரையாடுவதன் மூலமாகவும் எமது தணியாத தாகத்தினை இனிவரும் காலங்களில் உரிய முறையில் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வேண்டப்படுகிறார்கள்.

தொகுப்பு:
சசிரஜனி புலேந்திரன்

## இன்று ஒரு தகவல்

# அதிசய மோசடி

அமெரிக்க வியாபாரி ஒருவர் மிகவும் ஆர்வமாக ஒரு நாள் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தார். அவர் கண்ணில பட்டது ஒரு விளம்பரம். அது என்ன விளம்பரம் என்றால் பாரிஸில் உள்ள "ஈ.்.பிள்டவர்" இருக்கின்றதல்லவா! அந்த உயரமான கோபுரம் ஏலத்திற்கு வருகின்றது என்பது தான்.

அப்படியென்றால் அதை ஏலத்தில் எடுத்து பிரித்து விற்றோமானால் நல்ல இலாபம் கிடைக்குமேயென்று யோசித்தார். உடனே விளம்பரம் கொடுத்தது யாரென்று விசாரிதது அவருடன தொடர்பு கொண்டார். அவரும் உடனே கிளம்பி வருவதாகக் கூறினார்.

சிறிது நேரத்தில் ஆடம்பரமான கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கினார் அவர். தன்னை அறிமுகப் படுத்திககொண்டார். "எனது பெயர் ஸ்டான்லிலோ பாரிஸ் நகர அதிகாரிகளில் ஒருவர் நான்" என்றார். "வாருங்கள் அந்த டவரைப் பார்க்கலாம்" என்றார். இரண்டு பேரும் சென்று பார்த்தனர்.

"உங்களுடைய மதிப்பு என்ன?" என்றார் இவர். "உட்கார்ந்து பேசலாம் வாருங்கள்" என்றார். அவர் ஒரு ஹோட்டலுக்கு சென்று உட்கார்ந்து பேசினார்கள். "இதோ பாருங்கள் இந்த ஈ.்.பிள்டவர் ஒரு உலக அதிசயம் இருந்தாலும இரண்டாவது உலக யுத்தத்தின்போது மிகவும் சேதமாகி விட்டது. அதனால் தான் இதனைத் துண்டு துண்டாக கழற்றி விற்று விடலாம் என்று பிரெஞ்ச் அரசாங்கம் முடிவு செயது விட்டது. அதுதொடர்பான அதிகாரிதான் நான். அரசின் சார்பாக இதை விலைபேசி விற்கவேண்டிய பொறுப்பு என்னுடையது" என்றார்.

இரண்டு பேரும் பேசி இறுதியாக 25 ஆயிரம் டொலர் என்று முடிவுக்கு வந்தனர். இவர் பணத்தைக் கொடுத்தார். அவர் அதை வாங்கிக்கொண்டார். அரசாங்க முத்திரையுடன் பத்திரத்தை எழுதி வாங்கி அந்த பாரிஸ் நகர ஈ.்.பிள்டவரை வியாபாரியின் பெயருக்கு மாற்றம் செய்து கொடுத்து விட்டு அவர் புறப்பட்டார்.

மறுநாள் வியாபாரி ஆட்களை அழைத்துக்கொண்டு கோபுரத்தற்கு வந்து அதைக் கழற்ற ஆரம்பித்தார். அப்போது தான் யாரோ வந்து கழுத்தைப் பிடித்தார்கள். யாரென்று திரும்பிப் பார்த்தார். பொலிஸ் "என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்றார்கள் "கோபுரத்தைப் பகுதி பகுதியாகக் கழறறிக் கொண்டிருக்கிறேன்" என்றார். "உனனை பகுதி பகுதியாகக் கழற்றி விடுவோம்" என்றது பொலிஸ்.

இநதக் கோபுரத்தை நான் விலைக்கு வாங்கியிருக்கிறேன்" என்று கூறி பத்திரத்தை எடுத்துக் காட்டினார். இவர் அதை விற்றவருக்கும் அரசாங்கத்துக்கும் எதுவிதமான தொடர்பும் இல்லை என்பதை அவருக்குப் புரிய வைப்பதற்குள் அவர்களுக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. "நாம் நன்றாக ஏமாந்து போய்விட் டோம்" என்பது அந்த ஆளுக்கும் கடைசியாகத் தான் விளங்கியது. ஐயோ ஏமாந்து விட்டேன் என்று அலற ஆரம்பித்துவிட்டார்.

பாரிஸ் பொலிஸ் மிகவும் தீவிரமாகத் தேட ஆரம்பித்தது. ஆளைக் கண்டுபிடித்தார்கள். அவருக்கு 9 மாதம் சிறைத் தண்டனை கிடைத்தது. அதன் பின் தான் அந்த ஆள் இப்படிப் பலபேரைப் பலவிதமாக ஏமாற்றியுள்ளான் என்பது தெரிய வந்தது. 50 வயதிற்குள் துண்டு துண்டாக 16 வருஷம் ஜெயிலில் இருந்திருக்கிறான். ஈ.்.பிள்டவரை விற்பதற்கு முன் லண்டனில் புகழ் பெற்ற செயின்ட் போல் சேர்ச்சை ஒரு ஜப்பானிய பணக்காரருக்கு விற்றானாம் இதே நபர்.

ஜெயிலில் அடைத்த பின்பும் அவன் சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லையாம். பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்து கொண்டு "என்ன இப்படிச் செய்து விட்டீர்கள்?" என்ற போது "நானே சும்மா தெருவில் சென்றால் கூட பணக்காரர்கள் தானாக வந்து என்னிடம் ஏமாந்து போகின்றனர் நான் என்ன செய்வது" என்றானாம். அப்போது அவன் கொடுத்த பேட்டி உலகம் முழுதும் பிரபலமாம். 50 வயதிற்குப் பின்பு அந்த ஆள் ஏமாற்று வேலையை விட்டு விட்டு உட்கார்ந்த இடத்திலேயே வாழ்வை அனுபவித்து விட்டுப் போய்ச் சேர்ந்தானாம்.

உலகில் எப்படியெல்லாம் நடக்கிறது பாருங்கள். நமது ஊரிலும் கூட ஒரு கதை சொல்வார்கள். புத்தி சுவாதீன மற்ற இருவர் பேசிக்கொண்டிருந்தனராம். அதில் ஒருவன "நான் தஞ்சாவூர் பெரிய கோவிலை விலைக்கு வாங்கலாம் என்று இருக்கிறேன்." என்றானாம். அதற்கு மற்றவன் சிறிது நேரம் யோசித்து விட்டு "நான் அதை விற்பதாக இல்லை" என்றானாம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இராணுவத்தை அகற்றி இயல்பு வாழ்வுக்கு வழிசமைக்க அணி திரள்வோம்

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியேற்றம், இயல்புவாழ்க்கையை ஏற்படுத்தல், மலையக மக்கள் மீதான வன்முறைகள் தமிழ்த் தேசிய பற்றாளர்கள் மீதான படுகொலைகள் என்பவற்றைக் கண்டித்து எதிர்வரும் 17ஆம் திகதி மேற்கொள்ளப் படவுளள மாபெரும் கண்டனப் பேரணியில் அனைத்து மக்களும் கலந்துகொண்டு எமது எதிர்ப்பை சர்வதேசத்திற்கும் ஸ்ரீலங்கா அரசிற்கும் வெளிப்படுத்துவோம்.

இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளது தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் . இது தொடர்பில் மேற்படி கழகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும்,

புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டு இன்று 28 மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் தமிழ் மக்கள் வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இன்று பதவியில் இருக்கும் சந்திரிகா தலைமையிலான அரசு சமாதானப்பேச்சுக்களை முன்னெடுப்பதை விடுத்து போரின் மீது கவனம் செலுத்துகின்றது.

1994ல் இதே சந்திரிகா அரசு பதவிக்கு வந்த போது போரின் மூலம் சமாதானம் என்ற கோஷத்தை முன் வைத்து எம் மக்களை கொன்றொழித்தது. அக் காலத்தில் எம்மக்கள் சந்தித்த இழப்புக்கள் ஏராளம்.இன்று ஜே.வி.பியுடன் இணைந்து ஆட்சி அமைத்த சந்திரிகா அரசு இயல்பு வாழ்க்கையை ஏறபடுத்தாமல் காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் பெருமளவு நிலங்கள் இராணுவத்தால் அபகரிக்கப் பட்டுள்ளது. நிலங்களை இழந்த மக்கள் இன்று வரை அகதி வாழ்க்கை வாழும் கொடூரம், இத்தனைக்கும மேலாக இடம்பெயர்ந்த மக்களின் நிவாரண வெட்டு. இதனால் ஏராளமான இடம்பெயர்ந்த குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக இன்றும் எத்தனையோ பாடசாலைகள் இராணுவ முகாமகளாக உள்ளன. அல்லது பாடசாலைகளுக்கு அருகில் இராணுவம இருப்பதாலும் இராணுவ நடமாட்டத்தாலும் தமிழ மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. எமது மக்கள் மளக் குடியமரவும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும் வசதியாக உடனடியாக எமது மண்ணை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் அதற்காக அனைவரும் ஒன்று பட்டு குரல் கொடுப்போம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# காரைநகரில் கடிநாய்கள் பெருக்கம் 5 மாதங்களில் 78 பேருக்குச் சிகிச்சை

(காரைநகர்)

நாய்க்கடிக்கு இலக்காகி காரைநகர் வைத்திய சாலையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இந்நிலமையை பிரதேச சபையோ ஏனைய அதிகாரிகளோ கட்டுப்படுத்துவதற்கு முன் வராதது பெரும் கவலைக்குரிய விடயமாகும் என்று காரைநகர் பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி திருமதி எஸ்.கனகசபை தெரிவித்துள்ளார்.

வைத்திய அதிகாரி மேலும் கூறுகையில்,கடந்த 7 நாட்களில் மட்டும் 8பேர் நாய்கடித்து எமது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த மே மாதத்தில் மட்டும் 25 பேர் நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளதோடு 3 பேர் விசர் நாய்க்கடிக்கு இலக்காகி யாழ் போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர்.

இவ்வருடம் கடந்த 5 மாதத்திற்குள் 78 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்துடன் கடந்த வருடம் 159 பேர் நாய்க்கடிக்கு உட்பட்ட போதும் இவ்வருடம் நாய்க் கடிக்கு இலக்காகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

மககளின் வளர்ப்பு நாய்களாக இருந்தாலும் அவைகளைக் கட்டி வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான வளர்ப்பு நாய்களிற்கு நோய்த்தடுப்பு மருந்துகளை உரிய காலப்பகுதிகளில் ஏற்ற வேண்டும்.

இந் நடவடிக்கைகளை எடுக்க காரைநகர் பிரதேச சபையின் அதிகாரிகளோ, ஏனைய பொறுப்பான அதிகாரிகளோ முன் வராதுள்ளனர். அத்துடன், வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றி அடையாளத்தகடுகள் கட்டினால் ஏனைய கட்டாக்காலி நாய்களையும் பிரதேச சபையினால் அழிக்கமுடியும். உரிய அதிகாரிகள் இது வடயத்தில் கவனமெடுக்காது தொடர்ந்தும் அசமந்தமாக இருப்பார்களேயானால் நாய்க்கடிக்கும், விசர் நாய்க்கடிக்கும் இலக்காகுவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியாது போகும்.

காரைநகரில் மக்களை மட்டுமல்லாது, கடந்த காலங்களில் கட்டாக்காலி மற்றும் வளர்ப்பு நாய்கள் அதிகமான வளர்ப்பு மிருகங்களையும் கடித்துக்கொன்றுள்ளன. அத்துடன் கோழிகளே வளர்க்க முடியாதுள்ளதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (உ-246)

## இராசி பலன்

**13.06.2004**
**(வைகாசி 31,ஞாயிற்றுக்கிழமை)**
**ஏகாதசி மு.இ.7.37 வரை**
**அச்சுவினி பி.இ.12.26வரை**
**இராகுகாலம் 4.23-5.53 மணிவரை**
**சுபநேரம் 8.53-10.23 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

**மேடம்**
பெரியோர் உதவி, எடுத்த கருமங்கள் கைகூடும், போசன நன்மை, திடீர் நன்மை.

**இடபம்**
சயனசுகக் குறைவு, மனக்கிலேசம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், சுபசெலவு.

**மிதுனம்**
கலந்துரையாடல், சந்தோசமான சம்பவம், காரிய சித்தி, நண்பர்கள் உதவி.

**கடகம்**
தொழில் சிந்தை, காரிய அனுகூலம், அதிகாரம், நல்ல சம்பவம்.

**சிங்கம்**
ரோக பயம், கட்டுப்பாடு, பிதா சிந்தை, தொழில் சிந்தை.

**கன்னி**
உடல் நலக்குறைவு, எதிர் பாராத அச்சம், காரிய தடங்கல், போசன சுகம்.

**துலாம்**
அபூர்வ சந்திப்பு, புதிய முயற்சி, எதிர் பாராத நன்மை, கெளரவமான நிலை.

**விருச்சிகம்**
சுப நிகழ்வு, எடுத்த கருமங்கள் கைகூடும், மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம்.

**தனுசு**
குடும்பக் கவலை, உடல் நலக் குறைவு, காரிய தாமதம், பிரயாண நன்மை.

**மகரம்**
தாய்வழி உறவு, மனச்சோர்வு, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகக் குறைவு.

**கும்பம்**
புதிய செய்தி, கலந்துரையாடல், பிறர் உதவி, காரிய நன்மை.

**மீனம்**
எடுத்த காரியம் தாமதமாகும், தெய்வசிந்தை, பொருள் விரயம், கெளரவக் குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# யானையின் உயரத்தை அளக்க புதிய கருவி கண்டுபிடிப்பு

## பேராதனை பல்கலைக்கழக பட்டதாரி சாதனை

(கொழும்பு)

ஒரு மைல் தூரத்திலிருந்தே யானை ஒன்றின் உயரத்தை அளக்கும் கருவி ஒன்றை இலங்கையின் இளம மிருக வைத்தியர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கடந்த வருட மிருக வைத்தியப் பட்டதாரியான டாக்டர் பி.திஸாநாயக்கா என்பவரே இதனைக் கண்டுபிடித்துள்ளார்.

யானையின் உயரத்தை வைத்தே அதற்கு வழங்கப் படும் மருந்துகள் அளக்கப்படுவதால், உயரம் கணிப் பிடுதல் அவசியம். பொதுவாக யானையின் உயரம் இது வரையும் அதன் பாதத்தின் அடியைக்கொண்டே (பரிதி) அளக்கப்பட்டு வந்தது. யானை ஒன்று காயமடைந்தால் அதற்கு மருந்து கொடுப்பதற்கு டாக்டர் திஸாநாயகாவின் கண்டு பிடிப்பு உதவும் என சிரேஷ்ட மிருக வைத்தியர் டாக்டர் அசோக தங்கொல தெரிவித்துள்ளார்.

இது உலகமெங்கும் மிருக வைத்தியர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம். இதுபோன்றதொரு முறை தற்போது உலகில் கிடையாது. இக்கருவியை 100 வீதம் சரியாகச் செயற்பட வைக்க முடியும் எனஅவர் மேலும் தெரிவித்தார். மேற்படி உபகரணத்தை திஸாநாயக்கா காட்சிக்கு வைக்கவுள்ளார். (த-6)

## விபுலானந்தர் விழா

(இணுவில்)

விபுலானந்தர் நினைவு தினத்தை மிகச் சிறப்பான முறையில் அனுஷ்டிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சம்பநதப்பட்ட சகல பாடசாலைகளுக்கும் அறிவுறுத்தியுள்ளார். அந்த வகையில் எதிர்வரும் 19ஆம் திகதியன்று சகல பாடசாலைகளிலும் கலைநிகழ்வுகள் விசேட கூட்டங்கள் என்பன இடம்பெறுதல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


இதற்கமைவாக சகல பாடசாலைகளிலும் இதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (உ-122)

# கெரியா புஷ்ஷா?

# அமெரிக்காவை ஆளப்போவது யார்?

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருகிறது. அமெரிக்க அரசியல் நிறுவனத்தின் இரண்டு முக்கிய பிரதிநிதிகளான ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷ"க்கும் ஜோன் கெரிக்கும் தேர்தல் போட்டி நடப்பதற் கான அரங்கம் வடிவமைக்கப் பட்டுவிட்டது.

இவர்கள் இருவருக்கும் இடை யில் அடிப்படையில் வேறுபாடு ஒன்றும் கிடையாது. 300 மில்லியன் மக் களைக் கொண்ட நாட்டில்,



சிக்கல் வாய்ந்த மற்றும் அதிகரித்த அளவில் துருவமுனைப்படுத்தப்பட்ட சமுதாயக் கட்டமைப்பு காணப்படும் நிலையில் எதிர் வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதி மக்கள் தம் ஒட்டு மொத்தத் தீர்ப்பை வெளிப்படுத்தவிருக்கின்றனர்.

பற்றி எரியும் பிரச்சினைகளில் முக்கியமானதான ஈராக் மீதான போரில் புஷ்ஷ"டனான கெரியின் கருத்து வேறுபாடுகள் முற்றிலும் தந்திரோபாயமானது தான். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நாட்டிலிருந்து ப்டைகளை மீளப் பெறவேண்டும் என்ற கோரிக்கையை அவர் எதிர்க்கிறார் என்பதுடன் ஈராக்கை தாக்குவதற்குத் தேவையான இராணுவப் படைகளும் மற்றும் ஆதரவாளர்களும் கட்டுப் பாட்டுடன் இருக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

## சூடுபிடித்திருக்கும் தேர்தல் பிரசாரங்கள்

நவம்பர் மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலுக்கு, இம்முறை வழமைக்கு மாறாக பிரசாரங்கள் நேரகாலத்துடனேயே சூடுபிடித்துவிட்டன.

குடியரசுக் கட்சியின் சார்பில் மீண்டும் போட்டியிடும் ஜனாதிபதி புஷ்ஷை எதிர்த்து மிகப் பலமான போட்டியாளராக ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோன் கெரி உருவெடுத்துள்ளார்.

கெரி வென்றுவிடுவாரென்ற அச்சம் காரணமாகவே தான் தேர்தல் பிரசாரங்களில் நேரகாலத்துடனேயே குதித்து விட்டார் புஷ். ‘‘நான் என்ன சளைத்தவனா?’’ என்பதைப் போல் ஜோன் கெரியும் புஷ்ஷிற்கு நிகராக ஏன் புஷ்ஷின் சகாக்களே தமது வாயால் மெச்சும் அளவுக்கு பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

கெரியின் இந்த உச்சக் கட்ட தேர்தல் பிரசாரங்கள் ஜனாதிபதி புஷ்ஷிற்கும், அவரின் அரசியலில் முக்கிய பொறுப்புக்களில் இருப்பவர்களுக்கும் உள்ளூர அச்சத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

## உட்குழுத் தேர்தலில் கெரியின் வெற்றி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடப் போவது யார்? என்ற கேள்வி, கடந்த ஆண்டின் இறுதியில் பரபரப்பாக உலா வந்தது. அமெரிக்க நாட்டவர்கள் மட்டுமன்றி புஷ்ஷை ஆதரிப்பவர்கள் மற்றும் விரோதிகள் என அனைவரினது மனங்களி லும் உலா வந்த இந்தக் கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத் தார் ஜோன் கெரி.

குடியரசுக் கட்சியின் சார்பில் ஏகோபித்த முறையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிட ஜனநாயகக் கட்சியினர் பலர் போட்டா போட்டியிட்டனர். இருந்தாலும் மசாச்சுசெட்ஸின் செனட் சபை உறுப்பினரான ஜோன் கெரி, கடந்த மார்ச் மாதம் 2ஆம் திகதி நடந்து முடிந்த பத்து மாநிலங்களின் உட்குழுத் தொடக்கத் தேர்தல்களில் ஒன்பதில் வெற்றிகண்டு, மாநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டத்தில் வேறு எவரும் போட்டியிட முடியாத வகையில் முன்னேறியதால அவரின் கடைசி முக்கிய போட்டியாளரான வடகரோலினாவின் செனட் உறுப்பினர் ஜோன் எட்வார்ட்ஸ், ஜனநாயகக் கட்சியின் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளருக்கான போட்டியில் இருந்து விலக நேரிட்டது.

உட்குழுத் தேர்தல்களில் ஆரம்பம் முதல் இறுதி வரை அனைத்துச் சுற்றுகளிலும் வெற்றிவாகை சூடிய ஜோன் கெரிக்கு ஆரம்பத்தில் பலமான எதிர்ப்பு இருந்தாலும் இறுதியில் அவரே போட்டியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட் டார்.

## ஜோன் கெரி தேர்தலில் வெற்றி பெற்றால்...

வியட்நாம் போர் வீரரான ஜோன் கெரிக்கு தற்போது 45 வயது முடிவடைகிறது. இருந்தாலும் இவரின் சாதுரியமான பேச்சு, கொள்கை என்பன ஜனாதிபதி புஷ்ஷின் எதிர்கால வெற்றி குறித்து கேள்வியை எழுப் பியிருக்கிறது. வியட்நாம் போரின் பின் அமெரிக்கப் பாதுகாப்புப் படையில் இருந்து விலகிய இவருக்கு அரசியல் ஆர்வம் வந்ததால் ஜனநாயகக் கட்சியின் தொண்டனாக இணைந்து நின்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அபூர்வ வாய்ப்பைப் பெற் றுள்ளார்.

தனக்குக் கிடைத்த வாய்ப்பை சரிவரப் பயன்படுத்தி வரும் ஜோன் கெரி, அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாவ தற்கு வாய்ப்புக்கள் மிக மிக அதிகம் என்று கருத்துக் கணிப்புக்கள் தெரிவித் துள்ளன.

ஜனாதிபதி புஷ்ஷின் வெளியுறவுக கொள்கைகளை பலமாக எதிர்த்து வரும் கெரி, தான் ஜனாதிப தியாக வந்தால் பாதா ளத்தை நோக் கிச் செல்லும் அமெரிக்கப் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாகவும், புஷ் தலைமையிலான அரசின் வெளியுறவுக் கொள்கை களை மாற்றியமைத்து அமெரிக்காவுக்கும் ஏனைய நாடுகளிற்கு நன்மை பயக்கும் வகையில் செயற்படப் போவதாகவும் உறுதி யளித்திருக கின்றார்.

அததோடு பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கிவிட்ட ஈராக் விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் கூறியிருக்கிறார். அரசியல் வாதிகளின் வாக்குகளை நம்பிய மக்கள் அவை நிறை வேற்றப்படாமல் ஏமாறுவது ஒன்றும் புதிதல்ல. ஈராக் விடயத்தில ஜோன் கெரி தெரிவித்து வரும் கருத்துக்கள் அனைவரை யும் ஈர்த்துள்ளன.

‘‘ஜனாதிபதி புஷ்தலைமையி லான அரசு தனது சுயலாபத்திற்காக அமெரிக்கப் படையினரை ஈராக்கில் பலிக் கடாவாக்கிவிட்டது ’’ என்பதே கெரியின் பிரதான வாதம். ஈராக் விடயத் திலும் பெரும்பாலான அமெரிக்கர்கள் ஆரம்பத்தில் ஜனாதிபதி புஷ்ஷிற்கு ஆத ரவு தெரிவித் திருந் தனர். ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது.

தமது உறவுகள் ஈராக்கிய பாலைவனங்களில் செத்துமடிவது தொடர்கதையாகி வருவதால், ஆரம்பத்தில் ஜனாதிபதி புஷ்ஷிற்கு ஆதரவாகக்



## நோயல்

குரல் கொடுத்த வர்கள் இன்று தமது நிலையை மாற்றி விட்ட னர். ஈராக் விடயததில் அமெரிக்கா ஒதுங் கிக் கொள்வதே நல்லது என்பதே அவர்களின் கருத்து.

இந்தக் கருத்தையே ஜோன் கெரியும் வலியு றுத்தி வருகிறார். ஆகையால் அமெரிக்கர்களின் மனங்களில் தனக் கென்று தனியிடம் பிடித்து விட்டார் ஜோன் கெரி. இதுவே இவரின் வெற் றியை உறுதிப்படுத்தி இருக் கிறது என் கிறார்கள் அவரது ஆதர வாளர்கள். இவரின் கருத் துப் படி பார்க்குமிடத்து, ஈராக் கைவிட்டு அமெரிக்கா உடனடியாக வெளியேறி விட வேண்டும். ஆனால், அது நடக் காது. ஏனெனில், ஈராக்கைக் கைவிட்டு வெளியேறினால் அது தனக்கும் தனது தலைமையிலான அரசுக்கும் பெரும் இழுக்கு என்று கருதும் புஷ், இன்னும் சில வருடங் களுக்கு அமெரிக்கப் படைகளை தொடர்ந்து ஈராக்கிலேயே தங்க வைக்கவே திட்டம் போட் டுள்ளார்.

ஆகையால், ஜோன் கெரியின் கருத்து உடனடியாக நிறைவேறுவதற்குச் சாத்தியமில்லை. ஆனாலும், ஜோன் கெரியின் கருத்தை இந்த வருடத்திற்குள் நிறைவேற்றுவதற்கு அமெரிக்கர்கள் விரும்பினால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது விருப்பத்தை ஜனாதிபதி புஷ்ஷிற்கு பாடம் புகட்டுவதனூடாக அவர்கள் தெரியப்படுத்த வேண்டும். அதாவது, தேர்தலில் புஷ்ஷை தோற்கடித்து ஜோன் கெரியை வெற்றிபெறச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே கெரியின் விருப்பத்தையும் தமது முடிவையும் அவர்கள் நிறைவேற்றிக் கொள்ளலாம். அதை அவர்கள் செய்வார்கள் என்றே கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

## புஷ்ஷினை இப்படியா மானங்கெடுப்பது?

அரசியலில் முதிர்ச்சி பெற்ற ஜோன் கெரி, தான் எப்படியாவது ஆட்சிப்பீடம் ஏறவேண்டும் என்ற ஆசையில் தவிப்பதால் ஜனாதிபதி புஷ்ஷின் ஆட்சியிலும் அவரின் தந்தை சீனியர் புஷ்ஷின் ஆட்சியிலும் நடந்த, நடந்து வரும் மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்களை அம்பலப்படுத்தியிருக்கிறார். அவற்றில் முக்கியமானது- வியட்நாம் போரின் போது தற்போதைய ஜனாதிபதி புஷ் அமெரிக்க தேசியப் பாதுகாப்புப் படையில் இருந்து சொல்லிக் கொள்ளாமல் நைசாக நழுவிவிட்டார் என்ற குற்றச்சாட்டு. இந்த விவகாரம் முன்னர் சூடுபிடித்தபோதும் தற்போது அது தணிந்துவிட்டது.

ஆனால், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளரைத் தெரிவு செய்வ தற்கான உட்குழுத் தேர்தல் பிரசாரம் சூடுபிடித் திருந்த போது, இந்த விவகாரத்தைக் கையில் தூக்கி தனது ஆதர வாளர்களின் எண்ணிக்கையை மென்மேலும் அதி கரித்தார் ஜோன் கெரி. இதுவே அவரது வெற்றியை உறுதிப்படுத்தியது என்று கூடக் கூறலாம்.

## புஷ்ஷின் ஆட்சி தொடருமா?

கடந்த ஜனாதிபதி தேர்தலில் அரும்பொட்டில் வெற்றியீட்டிய புஷ்ஷின் ஆரம்பமே சரியல்ல என்று தான் கூறவேண்டும். பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் ஆட்சியை நடத்த வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்ட புஷ்ஷிற்கு 2001ஆம ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி நடந்த மிக மிக கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல் கள் பேரிடியாக இறங்கின. அன் றைக் குப் பிடித்த சனியன் இன்று வரை புஷைை விட்டுப் போகவில்லை.

பொருளாதாரம், வேலையின்மை என பல் வேறு இடர்களுக்கு முகம் கொடுக்க வேண் டிய புஷ், தீவிரவாதத்திற்கு முற் றுப்புள்ளி வைக்க கங்கணம் கட்டினார்.


இந்நிலையில் தான் ஈராக் மீதான போரை முன்னெடுக்க ஜனாதிபதி புஷ் திட்டமிட்டார். ஆரம்பத்திலிருந்தே கடும் எதிர்ப்புக் காட்டப்பட்ட போதும் அவற்றையெல்லாம் மீறி தனது கூட்டணி நாடுகளுடன் போரை ஆரம்பித்தார்.

சதாம் ஹுஸைன் சிக்கியதும் புஷ் அடைந்த மகிழ்ச்சக்கு எல்லையே இல்லை. சரிந்து கொண்டு போன அவரது “கௌரவம்” மீண்டும் நிமிரத் தொடங்கியது. புஷ்தான் மீண்டும் ஜனாதிபதி யாவார் எனற பேச்சு அப்போது அடிபட்டது. ஆனால், மீண்டும் நிமிர்ந்த புஷ் ஷின கௌரவம் வெகு நாட்கள் நீடிக்கவில்லை. சதாமின் புதல் வர்கள் கொலை, சதாம் கைது, வேலையில் லாப் பிரச்சினை, பஞ்சம், பசி, பட்டினி என பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்த ஈராக்கியர் கள் வெகுண்டெ டழுந்தனர். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் போது ஈராக்கல் இத்தகைய தாக்கு தல்கள் அதி கரிப்பது புஷ்ஷின் வெற்றியைக் கேள்வி க்குற யாகியிருக்கின்றது. குறிப்பிட்டுச் சொல்லப்போனால், ஜோன கெரிக்கு தற்போது வெற்றி வாய்ட் பு அதிகம். ஜனாதிபதி புஷ்ஷிற்கு வெற்றிவாய்ப்பு குறைவு தான்.

# இறையரசுப் பாதையில் பயணித்து இயேசுவின் அருளைப் பெறுவோம்

## பரமபிதா காட்டிய பாதை

உலகிலே பலவிதமான பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஏழைகள் மிகவும் கொடுமையான துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள். வறுமையும் அதேவேளை பணமின்மையும் அவர்களின் வாழ்வை உயர்வடை



யாமல் செய்கின்றன. பணம் படைத்தவர்கள் பல விதமான சுக போகங்களை அனுபவித்துக் கொண்டு, ஏழையரின் கோரிக்கைகளை நியாயப்படுத்தி நிராகரிக்க முனைகின்றார்கள். "ஞானியின் இதயம் போதகத்தை தேடுகின்றது. மதி கெட்டோரின் வாய் அறிவீனத்தால் ஊட்டப்படுகின்றது" (பழமொழி 15:14) மழையும் பனியும் வானத்தில் இருந்து பொழியப்பட்டு விதைப்பவனுக்கு விதையும் உண்பவனுக்கு உணவும் அளிக்கின்றது. மானிடராகப் பிறந்த நாம் வேற்றுமையும், பாகுபாடும் காட்டுகின்றோம்.

### சீடர்களின் வழிகாட்டல்

பன்னிருவரையும் அழைத்து இயேசு, "பேய்களையெல்லாம் அடக்கவும், நோய்களைக் குணமாக்கவும், வல்லமையும், அதிகாரமும் அளித்தார்" (லூக் 9:1)

அப்போஸ்தலர்கள் இயேசு சொன்னபடி நடந்து திருச்சபையை வளர்த்தெடுத்தார்கள். ஆவியின் வல்லமை பூண்டவர்கள் அழியாத செல்வங்களாகிய விண்ணக செல்வங்களைச் சேர்ப்பதிலே சாட்சியம் பகர்ந்தார்கள். நவீன நற்செய்திப்பணியாளர்கள் அதிகாரப் போக்கும், ஆணவச் செருக்கும் உள்ளவர்களாக கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்செல்ல முனைகிறார்கள்.

தன் அயலானை நேசிக்காத, ஏழைகளை நசுக்குகின்ற, அவர்களை அடிமைப்படுத்துகின்ற செயற்பாடுகள் எல்லாம் பலனளிக்காதவைகளாகவே மாறிவிடும். "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" (லூக் 9:13) என்ற இயேசுவின் வார்த்தையை அப்போஸ்தலர்கள் சிரமேற் கொண்டு ஐயாயிரம் பேரின் பசியைப் போக்கினார்கள் - பணியாற்றினார்கள்.

### சிலுவையைப் பின் செல்பவர்

என்னைப் பின் செல்ல விரும்புகினறவன் தன்னையே மறுத்து தன சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் செல்லட்டும் என்று இயேசு பெருமான் திருவாய் மலர்ந்தருளினார். சிலுவைகளை அல்ல, CDகளையும், ஜெபமாலைகளை அல்ல கான் போன்களையும் சுமந்து கொண்டு நாம் இயேசு வைப் பின் செல்ல முடியாது. உலகத்தின் போக்கிற்கே முகம் கொடுத்துக் கொண்டு உன்னத இறைவனை உதாசீனம் செய்ய முடியாது.

கணனி உலகக் கனவிலே மூழ்கி கடவுளுக்கு பணிவிடை செய்ய முடியாது. இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவி முன்மாதிரிகை காட்டினார். நம்மில் எத்தனைபேர் பிறர் துன்பங்களைக் களைய, பிறருக்கு உதவ, தாழ்மையுடன் பணி செய்ய முன்வருகின்றோம்.

### ஆவியானவரின் வழிநடத்துதல்

"உண்மையின் ஆவியானவர் வந்த பின் நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" (அரு : 16 : 13) இயேசு விண்ணகம் சென்று 1971 ஆம் ஆண்டுகளிற்கு மேலாகிவிட்டது. இன்றுவரை பரிசுத்த திருச்சபையை வழி நடத்துபவர் உண்மையின் ஆவியானவரே. குடிவெறியிலும், காமக் கேளிக்கைகளிலும் காலத்தை வீணடிக்கின்றவர்களையும் காணும் போது இயேசு பெருமானின் வார்த்தைகளை இவர்கள் எவ்வளவு தூரம் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துகின்றார்கள் என்பது மன வேதனையைத் தருகின்றது.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும், சாரமேற்றவும் ஒளிகொடுத்து வழிகாட்டவும் வேண்டும். விவேகமுள்ள கன்னியர்களைப் போலவும் நல்ல சமாரித்தன்களாகவும் இறை அரசுக்குச் சான்று பகரவேண்டும்.

**அன்ரனி பீற்றர்**

### நற்செய்தி வாழ்வு

கிறிஸ்தவத்துக்கு எதிரான சக்திகள் எம வாழ்வை அலைக்கழிக்க நேரிட்டாலும், நற்செய்தியின் ஒளியிலே எம் வாழ்வு கட்டப்பட்டதாக அமையும் போது எதற்கும் நாம் அஞ்சத்தேவையில்லை. நாம் பெற்றுக்கொண்ட விசுவாச வாழ்வைச் சாட்சிய வாழ்வாக வாழந்து உண்மையான சீடர்களாக இயேசுவுக்கு சாட்சியம் பகர்ந்து இறை அரசுப் பாதையிலே பயணததைத் தொடர்வோம் இயேசுவின் அருள் பெறுவோம். □


## சிறுவிளம்பரம்

**A/L பௌதீகவியல் . இணைந்த கணிதம்**

பல வருடங்களாக மேற்படி பாடங்களைக் கற்பித்து வரும் ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள் உட்பட) கற்பிக்கப்படும் வகுப்புகள் நடைபெறுகின்றன. தனிப்பட்டமுறையிலும் கற்பிக்கப்படும். மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்த ஆசிரியர் R.பாலசுப்பிரமணியம் B.Sc.(cly), Dip in Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (8380)


## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி கந்த சுவாமி கோவில் வருடாந்த உற்சவம இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 13 தினங்கள் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 25,26 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது. (உ)

❖ ❖ ❖

(பொன்னாலை)

யாழ். வண்ணார்பண்ணை காட்டுத்துறை அம்பலவாண விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 7ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை ஆலயத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (உ-49)

## சங்காபிஷேகம்

(பொன்னாலை)

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகா சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

நணபகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதுடன், மாலை அம்பாள் வீதியுலா வருங்காட்சியும் இடம்பெறவுள்ளது.(உ-49)

# கலாசாலையை விட்டு வெளியேறியோர் கஷ்டப்பிரதேசத்தில் பணியாற்ற வேண்டும்

## வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டில் ஆசிரியர் கலாசாலையில் இருந்து வெளியேறி எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி நியமனம் பெறுபவர்கள் கஷ்டப் பிரதேசத்திலும் 2 வருட காலம் சேவையாற்ற வேண்டியிருக்கும் என வடக்கு -கிழக்கு மாகாணக கல்வ அமைச்சின் செயலாளர் ஆர்.தயாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், உடற்கல்வி, நடனம், சித்திரம் ஆகிய பாடங்களுக்குக் கூடுதலான ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருவதால், ஆசிரிய கலாசாலையில் இருந்து இவ்வருடம் வெளியேறிய ஆசிரியர்கள் அந்தந்த மாவட்டத்தின் தேவைக்குஏற்ப நியமிக்கப்பட்டு மிகுதியானவர்கள் இடமாற்றத் திட்டத்திற்கிணங்க கஷ்டப் பிரதேசங்களுக்கு 2 வருடகால சேவைக்காக நியமிக்கப்படுவார்கள் எனவும் கூறியுள்ளார். (உ-19)

## 'உணவுக்காக வேலை' அமுல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் "உணவுக்காக வேலை" என்ற விஷேட திட்டம் அமுல் படுத்தப்பட்டு வருகின்றது.

ஜப்பான், அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளின் நிதி உதவியின் கீழ் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. (உ)

## சீடா செயற்றிட்டம்

(கொழும்பு)

பெருந்தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவென சீடா செயற்றிட்டத்தின் கீழ் 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பாட்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான சுவீடன் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இச் சீடா செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ)

## நாவன்மைப் போட்டியில் வெற்றி



சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவி செல்வி இராகவர்த்தனி சிறிஸ்கந்தராசா, கொழும்பு விவேகானந்தா சபை அண்மையில் நடத்திய அகில இலங்கை ரீதியிலான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நாவன்மைப் போட்டியில் மேற்பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

## கந்த முருகேசனார் நினைவு தினம

(திருநெல்வேலி)

தமிழ்த் தாத்தா தென்புலோலியூர் கந்த முருகேசனாரின் 39வது ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு புலோலிச் சந்தியில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு முன்பாக இடம்பெறவுள்ளன.

பருத்தித்துறைப் பிரதேச சபையின் பிரதம நூலகர் எஸ்.திருச்செல்வம் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் சிறப்பு விருநதினர்களாக பண்டிதர் வீ.பரந்தாமன, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். இராசையா, யாழ்.செயலக உதவி அரசாங்க அதிபர் பி.வீரபத்திரபிள்ளை, இலங்கை வங்கி யாழ்.முகாமையாளர் எஸ்.நடராசலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, நாளை திங்கட் கிழமை தென்புலோலியூர் புற்றளை மகாவித்தியாலயத்தில் அதிபர் திருமதி சகுந்தலாதேவி தலைமையில் கந்தமுருகேசனாரின் நினைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (உ-43)

# ஓய்வூதியர்களின் அசமந்தப் போக்கே ஓய்வூதிய முரண்பாட்டுக்குக் காரணம்

## திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியங்களை வழங்குவதில் பல இன்னல்கள் எதிர் கொள்ளப்படுவதாக ஓய்வூதியத் திணைக்ளப் பணிப்பாளர் ஏ. திலகரட்ண தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலகங்களில் ஓய்வூதியங்கள் தொடர்பாக ஓய்வூதியர்களால் வழங்கப்படும் ஆவணங்கள் ஒழுங்காக இல்லாதிருப்பதனாலேயே ஓய்வூதிய முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறான முரண்பாடுகள் காரணமாக நாட்டில் 4 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குள்ள ஓய்வூதிய முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அத்துடன், ஓய்வூதியர்கள் அனைவரும் ஓய்வூதியங்கள் சம்பந்தமான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பித்து உதவுமாறும் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ- 4,60)

# ஜனாதிபதியின் மேல் புலிகள் நம்பிக்கையீனம்

(கொழும்பு)

தற்போதைய நிலைமைகளின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்வதில் சந்தேகம் தோன்றியுள்ளது எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் செயலகத்தில் இடம் பெற்ற சந்திப்பொன்றின் போது, வெளிநாட்டு ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.


உலக சுற்றுச் சூழல் தினம் ஜுன் –05



World Environment Day- June-05

**எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!**

சூழல் பாதுகாப்புப் பகுதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழம்.

**கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்**

**முருகைக் கற்பாறைகள் 93 நாடுகளில் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக் குத் தரம் இழந்துள்ளன. உலகில் மீந்திருக்கும் பவளப்பாறைகளில் 60 வீதமானவை வரும் 30 ஆண்டுகளுக்குள் பாரிய அழிவைச் சந் திக்கும் அபாயத்தில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.**

# பதவியைத்தேடி ஓடுபவள் நான் அல்லேன்
## காங்கிரஸ் தலைவர் சோனியா அறிவிப்பு

மத்தியில் காங்கிரஸ் தலைமையில் அமைந்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பா.ஜ.க.வுக்குக் கொடுக்கப்பட்ட பதிலடி



என்றும் கூட்டணி அரசு ஒரு புதிய அனுபவம் என்றும் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி கூறியிருக்கிறார்.

மக்களவைக்குத் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தரப் பிரதேச மாநில ரேபரேலி தொகுதியில் 2 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், கூட்டங்களில் பேசினார்.

காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் ஆட்சியில் உத்தரப்பிரதேசம் பெரிதும் பின் தங்கிவிட்டது என்று கூறிய அவர், தற்போது அங்கு காங்கிரஸ் ஆட்சி இல்லாத போதிலும், அம் மாநிலவளர்ச்சிக்காக மத்திய அரசு உரிய உதவிகளை அளிக்கும் என்று குறிப்பிட்டார்.

பதவியைத் தேடிப்பலரும் ஓடும் போது ஒரு சிலராவது அதைத் துறக்கும் மனம் கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காகவே பிரதமர் பதவியைத் தாம் ஏற்கவில்லையென்றும், இதற்குத் தமது மனச்சாட்சியே காரணம் என்றும் சோனியாகாந்தி கூறினார்.

காங்கிரஸைப் பலப்படுத்தக் காங்கிரஸ் தொண்டர்கள் பாடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (து)

# வாக்காளர் பட்டியல் விவகாரம் குறித்து தேர்தல் ஆணையம் விசாரணை

(நாகர்கோவில்)

தமிழ் நாட்டில் வாக்காளர் பட்டியலில் ஏராளமானவர்களது பெயர்கள் நீக்கப்பட்ட புகார் குறித்து விசாரிக்கத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட கேரள தலைமைத் தேர்தல் அதிகாரி வி.ஏ.தாமஸ், கன்னியாகுமரி மாவட்ட நாகர்கோவிலில் நேற்று முன்தினம் தனது விசாரணையைத் துவக்கினார்.

நாகர் கோவில் மக்களவைத் தேர்தல் அதிகாரியும் மாவட்ட ஆட்சித் தலைவருமான ராஜேஸ் லக்கானி மற்றும் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான ஆவணங்களை கேரள தலைமைத் தேர்தல் அதிகாரி பரிசீலனை செய்தார். (து)



புதுடில்லியில் ஒலிம்பிக் ஜோதி கடந்த வியாழக்கிழமை கொண்டு செல்லப்பட்ட போது தேசிய கொடியை ஏந்தி உற்சாகமாகக் கூச்சலிடும் குழந்தைகள். (வலது) ஹூமாயூன் கல்லறை அருகே ஜோதியை ஏந்திச் செல்லும் மலையேற்ற வீராங்கனை சந்தோஷ யாதவ் 27 நாடுகளில் 34 நகரங்கள் வழியாக ஒலிம்பிக்ஜோதி ஏதென்ஸைச் சென்றடைகிறது.

# குற்றப்பின்னணி உடையோர் பற்றி வாஜ்பாய் அன்று கூறியது என்ன?
## மக்களவையில் விவாதிக்கவேண்டும் என்கிறார் லாலுபிரசாத் யாதவ்

(டில்லி)

குற்றப் பின்னணியுடைய அமைச்சர்கள் சம்பந்தமாக அன்றைய பிரதமர் வாஜ்பாய் பேசியது உட்பட அனைத்து அம்சங்களையும் மக்களவை விவாதிக்கவேண்டுமென்று ராஷ்ட்ரீய ஜனதாதள் தலைவரும் ரயில்வே அமைச்சருமான லாலுபிரசாத் யாதவ் வலியுறுத்தியிருக்கிறார்.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மூவரை நீக்கவேண்டுமென்று மக்களவையில் கோரப்பட்ட போது 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் திகதி வாஜ்பாய் அளித்த பதிலை மீண்டும் அவையில் தாக்கல் செய்யப்படவேண்டுமென லாலுபிரசாத் யாதவ் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருக்கிறார்.

ஒருவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டு விட்டதாலேயே அவர் குற்றவாளி அல்ல, அதற்காக யாரையும் பதவியிலிருந்து நீக்கும்படி அரசியலமைப்புச் சட்டம் கூறவில்லையென்றும், அதற்காக அவர்கள் இராஜிநாமா செய்தாலும் ஏற்கப்போவதில்லை என்றும் வாஜ்பாய் கூறியிருப்பதாக லாலுபிரசாத் யாதவ் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே யாரையும் குற்றவாளி எனக் குறிப்பிடலாம் என்று வாஜ்பாய் குறிப்பிட்டதாகத் தமது அறிக்கையில் அவர் கூறியிருக்கிறார். (து)



நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் உத்தரப்பிரதேச மாநில ரேபரேலித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, அத்தொகுதியில் கட்சியின் வெற்றிக்காக பணியாற்றிய தொண்டர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகக் கூட்டம் ஒன்று நடத்தினார். இதில் காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் சார்பில் சோனியாகாந்திக்கு கிரீடம் அணிவிக்கப்பட்டது.

## ஈராக்குக்கு இந்திய உதவிப்படை

தற்போது உருவாகியுள்ள புதிய சர்வதேசச் சூழ்நிலையில், ஈராக்குக்கு இந்தியப் படைகளை அனுப்பும் கோரிக்கை குறித்து மத்திய அரசு மீண்டும் பரிசீலிக்குமென்று வெளியுறவு அமைச்சர் . நடவர் சிங் அமெரிக்காவில் கூறியதற்கு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சேபம். தெரிவித்திருக்கிறது.

ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கப் படைகளுக்கு உதவும் வகையில், இந்தியத் துருப்புக்களை அனுப்பக் கூடாது என்ற கொள்கையில் மன்மோகன் சிங் அரசின் நிலை என்னவென்பது தெளிவாக்கப்படவேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் குழுவெளியிட்ட அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளது.

ஐ.நா. தீர்மானப்படி ஈராக்குக்கு அனுப்பப்படும் பன்னாட்டுப் படைகள் ஐ.நா.வின் அமைதிப் படை அல்ல; ஏற்கெனவே அங்கு இருக்கும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட அமெரிக்கத் துருப்புக்களுக்கு உதவும் படைகள் தானென்று அந்த அறிக்கை கூறுகிறது. (து)

# இந்தியச் செய்திகள்

## குடியரசுத் தலைவரின் அனுமதிக்காகக் காத்திருக்கும் மதுரை உயர்நீதிமன்றம

(சென்னை)

சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக் கிளையைத் திறக்க குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகக் காத்திருப்பதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் வெங்கடபதி தெரிவித்திருக்கிறார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வழக்கத்திலுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பிறகே மதுரைக் கிளையைத் திறக்க மத்திய அரசு விரும்புவதாகக் குறிப்பிட்டார்.

குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கு கால அளவு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் வெங்கடபதி தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையுடன் மேலும் சில மாவட்டங்களைச் சேர்க்க வேண்டுமெனக்



கோரிக்கைகள் வந்திருப்பதாகவும் அது பறறி மத்திய அரசு பரிசீலித்து முடிவெடுக்குமென்றும் அவர் கூறினார். (து)

# அரசியல் இலாபம் தேட ஜெயலலிதா முயல்வதாக பா.ம.க. குற்றச்சாட்டு

(சென்னை)

காவிரிப் பிரச்சினையை அரசியலாக்கி, அரசியல் இலாபம் தேட ஜெயலலிதா முயல்வதாகப் பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்திருக்கிறார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பிரதமரைச் சந்திக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இடம் பெறச் சொல்லிவிட்டு தமிழ் நாட்டுக்குக் காவிரி நீரைப் பெற்றுத்தரும் பொறுப்பு சோனியாகாந்திக்கும், கருணாநிதிக்கும் மட்டுமே உள்ளதெனக் கூறுவது அவரது இரட்டை வேட அரசியலை எடுத்துக் காட்டுகிறது எனக் கூறியுள்ளார்.

ஜெயலலிதாவின் தன்னிச்சையான நடவடிக்கை காரணமாக காவிரியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தண்ணீர் பெற்றுத் தர அவர் தவறிவிட்டார் என ராமதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார். (து)




கோடை வெயில் தணிந்து தற்போது மழைபொழியத் துவங்கியுள்ளது. இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே மழை பொழிந்து பூமியைக் குளிர வைத்துள்ளது. அலகாபாத்தில் திடீரென பெய்த மழையில் நனையாமல் தப்பிக்க பொலித்தீன் கவரைப் பயன்படுத்தும் மக்கள். இந்த மழையினால் பெரும் அளவில் வெப்பம் தணிந்துள்ளது.

# உப சபாநாயகர் போட்டியின்றித் தெரிவு

(புதுடில்லி)

மக்களவையின் உப சபாநாயகராக அகாலிதள் கட்சியின் உறுப்பினர் சரண்ஜித் சிங் அத்வார் அதீவால் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

மக்களவை உப சபாநாயகர் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்த நிலையில், அரசு தரப்பிலும் எதிர்க்கட்சியினர் தரப்பிலுமாக அத்வால் பெயரை முன் மொழிந்து பத்துக்கும் மேற்பட்ட வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மக்களவை நேற்று முன்தினம் கூடியதும் சரண்ஜித் சிங் அத்வாலை மக்களவையின் உப சபாநாயகராக அடல்பிஹாரி வாஜ்பாய் முன்மொழிந்த தீர்மானத்தை மக்களவைச் சபாநாயகர் சோமநாத் சட்டர்ஜி வாசித்தார்.

இதையடுத்துக் குரல் வாக்கு மூலம் அத்வால் போட்டியின்றி ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரதமர் மன்மோகன் சிங்கும், எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே. அத்வானியும் அத்வாலை அவரது இருக்கைக்கு அழைத்துச் சென்றனர்.

இதனையடுத்தும் பிரதமர் மன்மோகன் சிங், எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உட்படப் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் அத்வாலை வாழ்த்திப் பேசினார்கள்.

பஞ்சாப் மாநிலச் சட்டப் பேரவைத் தலைவராகவும் பணியாற்றியுள்ள இவர், மக்களவை உறுப்பினராக 3 முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மக்களவை உப சபாநாயகர் பதவியை வசிக்கும் இரண்டாவது சீக்கியர் இவர்.

துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அத்வால், வழக்குகளுடன் தொடர்புடைய அமைச்சர்கள் குறித்து நாடாளுமன்றத்தில் தற்போது எழுந்துள்ள சிக்கலுக்கு, பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியுமென யோசனை கூறினர்.

அவை நடவடிக்கைகளைச் சுமுகமாக நடத்தத் தேவையான ஒத்துழைப்புக் கிடைக்குமென அவர் நம்பிக்கை தெரிவித்தார்.(து)



மண்டதீவுக் கடற்பரப்பில் 10.06.1986ஆம் ஆண்டு நடைபெற்ற இன அழிப்பில் கொலையுண்ட குருநகரைச் சேர்ந்த 31 கடற்தொழிலாளரின் நினைவாக நேற்று முன்தினம் வண.பிதா யோசப் ஜெயசீலன் அவர்களால் குருநகரில் திறந்து வைக்கப்பட்ட நினைவுச் சின்னம்.


## அன்பு வாசகர்களே!

அலைகடல் சூழ் மணிபல்லவத்தில் (நயினாதீவு) வீற்றிருந்து நம்மையாளும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இம் முறையும் வழமைபோல்

**நயினை நாகபூசணி அம்மன் பாமாலை**

உங்கள் வலம்புரியில் இடம்பெறவுள்ளது. உங்கள் பாமாலைகளை "நயினை அம்மன் பாமாலை" வலம்புரி, இலக்கம் 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

## அன்பார்ந்த மாணவர்களே!

வலம்புரியின் மற்றுமோர் கல்விச் சேவை

**க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்**

மிக விரைவில் உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்.


## விவாத அரங்கு 3

விடயம்

A–9 பாதை தமிழா கலாசாரத்திற்கு

**விடிவைத் தருமா? அல்லது அழிவைத் தருமா?**

*விவாத விடயத்தை முன்வைக்கிறார் வரணியூரைச் சேர்ந்த A. சங்கீதா.*

**நடுவர்:-**

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் பொன். கனேசமூர்த்தி (முகாமையாளர் மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை)

*உங்கள் வாதங்களை எழுதி அனுப்புங்கள்*

அனுப்பவேண்டிய முகவரி:-

விவாத அரங்கு<br>
வலம்புரி<br>
இல.15, வெள்ளாந்தெரு,<br>
யாழ்ப்பாணம்.

## சட்டவிரோதமாக சாராயம் விற்ற இருவர்அகப்பட்டனர்

அனுமதிப் பத்திரம் இன்றி சாராயம் விற்ற இருவர் யாழ் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட வேளை, குற்றததை ஒப்புக்கொண்டதன் பேரில, இவருவரிடம் இருந்தும் 18 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகவும் 6 ஆயிரம் ரூபா தர்மப் பணமாகவும் அறவிடப்பட்டது.(உ-19)

## கும்பாபிஷேகம்

(நவாலி)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (உ-267)

## தரைமீன்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அழகியல் கலாமன்றத்தினரின் அனுசரணையுடன் மல்லிகைப் பந்தல் வெளியீடான ச. முருகானந்தனின் "தரை மீன்கள்" சிறுகதைத்தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு கிளிநொச்சி நகர கலை பண்பாட்டு மண்டபத்தில் டாக்டர் சுஜந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை வே.பாலகுமாரனும் ஆய்வுரைகளை நா. யோகேந்திரநாதன், செல்வி மணிமேகலை ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ)

## போக்குவரத்துச்சபை முகாமைத்துவம் பலவீனம்

(கண்டி)

மத்திய போக்குவரத்துச் சபையின் நடவடிக்கைகளை கவனிப்பதற்கு மேலதிக ஊழியர் தொகையும் பலவீனமான முகாமைத்துவமுமே தடங்கலாகவுள்ளது என போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் ஒரு பேருந்துக்கு மாத்திரம் 15 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இவர்களுக்கான சம்பளத் தொகையும் வருமானத்திற்கும் ஏற்ற அளவில் இல்லாது அதிகமாகவே காணப்படுகிறது.

இதேபோல் பேருந்துச் சேவைகள தொடர்பான சரியான முகாமைத்துவம் இன்மையும் சேவையில் தாக்கத்தை உருவாக்கியுள்ளது.

இவை காரணமாக திருப்திகரமான பேருந்துச் சேவையை வழங்க முடியாத நிலை காணப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,60)

## இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடாத்தப்படும் கிறிக்கெற் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று நணபகல் 12.30 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளா கே. அகிலன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-10)

## விபசார விடுதியில் ஆளும்கட்சி அரசியல்வாதி

(கொழும்பு)

கொழும்பில் விபச்சார விடுதிச் சுற்றிவளைப்பின்போது ஆளும் கட்சியின் அரசியல்வாதியொருவர் உள்ளிட்ட, இலங்கை மற்றும் ஐரோப்பியப் பெண்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள வியாபாரக் கட்டடத் தொகுதியொனறின் 8வது மாடியில் விபச்சார நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக கிடைத்த தகவலையடுத்து, குறிப்பிட்ட பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்த போதே, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்தவெள்ளியன்று இடம் பெற்ற இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, விபச்சாரத்திறகுப பொறுப்பானவர் எனச் சந்தேகிக்கபபடும் பெண ஒருவர், மூன்று ஆண்களுடன் மது அருந்திக் கொண்டிருந்ததாகவும் இம்மூவரில் ஒருவர் ஆளும்கட்சி அரசியல்வாதியெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)


# வலம்புரி - சங்குநாதம்

## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுனர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில், பிரதேச செய்தியாளர்களை (பயிலுனர்கள்) நியமிப்பதற்கான விண்ணபபங்கள் கோரப்படுகின்றன.

- ♦ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த. (சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- ♦ பயிலுனர் தரத்தில் மூன்று மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் - ஆர்வமும் காணப்படுமடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.
- ♦ பயிலுனராக தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- ♦ குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- ♦ இலங்கையில் இருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகையிலும், ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.
- ♦ ஏற்கனவே பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தரச் செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

### தகுதியானவர்கள்

முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ. இல, விவாக நிலை, தொழில்புரியும் இடம், பதவி (இருப்பின்), கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, பிரதேச சபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம் (இருப்பின்) கல்வித்தகைமை, பிறதகைமை என்பவை உள்ளிட்டதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

**பிரதம ஆசிரியர்,<br>
வலம்புரி, சங்குநாதம்,<br>
இல: 15, வெள்ளாந்தெரு,<br>
யாழ்ப்பாணம்**

எனும் முகவரிக்கு 15.06.2004க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ, அன்றி தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கான அறிவித்தல் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்*

### பிரதேச செய்தியாளர் (பயிலுனர்) தெரிவிற்கான பிரதேசங்கள்

***வலிகாமம்***

திருநெல்வேலி<br>
நல்லூர்<br>
கந்தர் மடம்<br>
கோண்டாவில்<br>
கொக்குவில்<br>
மானிப்பாய்<br>
உரும்பிராய்<br>
சண்டிலிப்பாய்<br>
சங்கானை<br>
சித்தங்கேணி<br>
அராலி<br>
வட்டுக்கோட்டை<br>
மாதகல்<br>
பண்டத்தரிப்பு<br>
சில்லாலை<br>
தாவடி<br>
இணுவில்<br>
மருதனார்மடம்<br>
சுன்னாகம்<br>
மல்லாகம்<br>
தெல்லிப்பழை<br>
நாவாந்துறை<br>
வண்ணார்பண்ணை<br>
கொட்டடி<br>
பாசையூர்<br>
நாயன்மார்கட்டு<br>
கல்வியங்காடு<br>
நீர்வேலி<br>
சிறுப்பிட்டி<br>
ஆவரங்கால்<br>
அச்சுவேலி<br>
இடைக்காடு<br>
புத்தூர்<br>
ஊரெழு<br>
புன்னாலைக்கட்டுவன்<br>
அச்செழு<br>
குப்பிளான்<br>
ஒட்டுமடம்<br>
நீராவியடி<br>
அத்தியடி<br>
அரியாலை

***தீவகம்***

மண்டைதீவு<br>
அல்லைப்பிட்டி<br>
வேலணை<br>
புங்குடுதீவு<br>
நயினாதீவு<br>
நெடுந்தீவு<br>
அனலைதீவு<br>
எழுவைதீவு<br>
சுருவில்<br>
கரம்பொன்<br>
நாரந்தனை<br>
சரவணை

***வடமராட்சி***

கரணவாய்<br>
நெல்லியடி<br>
நவிண்டில்<br>
வல்வெட்டி<br>
வல்வெட்டித்துறை<br>
தொண்டைமானாறு<br>
துன்னாலை<br>
அல்வாய்<br>
வியாபாரி மூலை<br>
கொற்றாவத்தை<br>
நாகர்கோவில்<br>
செம்பியன்பற்று<br>
மணற்காடு<br>
பொலிகண்டி

***தென்மராட்சி***

நாவற்குழி<br>
மறவன்புலோ<br>
கைதடி<br>
நுணாவில்<br>
சாவகச்சேரி<br>
மீசாலை<br>
மட்டுவில்<br>
சரசாலை<br>
கொடிகாமம்<br>
வரணி<br>
மிருசுவில்<br>
எழுதுமட்டுவாள்<br>
முகமாலை<br>
பளை

***வன்னிப் பிராந்தியம்***

கிளிநொச்சி<br>
வட்டக்கச்சி<br>
முருகண்டி<br>
மல்லாவி<br>
மாங்குளம்<br>
வவுனிக்குளம்<br>
கனகராயன் குளம்<br>
நெடுங்கேணி<br>
புளியங்குளம்<br>
முல்லைத்தீவு<br>
முள்ளியவளை<br>
புதுக்குடியிருப்பு<br>
விசுவ மடு

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். - குறள்

வலம்புரி

## நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி பிரயோகிப்பாரா?

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக் கால சபைத் திட்ட வரைபின் கீழ், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சம்மதம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்ட தகவலை வெளியிட்டிருந்தார்.

இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபில் இருந்து பேச்சுக்களைத் தொடர்வது, விடுதலைப் புலிகள் முன்வைத்த அடிப்படை விடயங்களில் ஒன்று. அதனை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஏற்றுக்கொள்ளாத வரை சமாதானப் பேச்சுக்கள் சாத்தியமற்றவை என்பது அறுதியான முடிபு.

இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளு மன்ற உறுப்பினர்களைச் சந்தித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, விடுதலைப் புலிகள் முன் வைத்த இடைக்கால சபைத் திட்ட வரைபில் இருந்து சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்குச் சம்மதம் தெரிவித்திருந்தார்.

இ∴து ஜனாதிபதியின் சமாதான விருப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது. எனினும் ஜனாதிபதியின் மேற்போந்த சம்மதத்திற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் கூட்டுக் கட்சியான ஜே.வி.பி. இடங்கொடுக்க மாட்டாதென்பதை அக்கட்சியின் கருத்து உறுதிப்படுத்தியுள்ளது.

அதாவது, விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபில் இருந்து சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் அனுமதியளிக்காதென அக் கட்சி அறிவித்துள்ளது.

இதேபோல் இடைக்கால சபைத் திட்ட வரைபில் இருந்து சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாதென நாட்டுப் பற்றுடைய தேசிய அமைப்புக் கூறியுள்ளது.

இவ்வாறு உள்ளும் புறமும் எதிர்ப்புகள் எழுகின்ற வேளை அவற்றையெல்லாம் ஜனாதிபதி எதிர் கொண்டு தனது வாக்குறுதியைக் காப்பாற்றுவாரா? என்பதை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் சமாதானப் பேச்சை மேற்கொள்வதற்கு முன்னர் அந்த அரசுக்கு பாராளுமன்றத்தில் இருக்கக் கூடிய பெரும்பான்மைப் பலம் குறித்து விடுதலைப் புலிகள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதாவது, பாராளுமன்றத்தில் ஆட்சியில் நிலையாக அமர்ந்து கொள்வதற்கு ஊசலாடும் ஓர் அரசை நம்பி சமாதானப் பேச்சை ஆரம்பிக்க முடியுமா? என்பதே விடுதலைப் புலிகள் முன் வைத்த கேள்வியாகும்.

இதற்குப் பதிலளித்த நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, பாராளுமன்றத்தில் அரசுக்கு இருக்கக் கூடிய பெரும்பான்மைப் பலம் குறித்த சந்தேகங்கள் விடுதலைப் புலிகளுக்குத் தேவையற்றதாகும். ஏனெனில் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடமே இருக்கிறது. இதனால் அரசு பலம் பற்றிய சந்தேகங்களும், கேள்விகளும் தேவையற்றவையெனக் கூறியிருந்தார்.

கலாநிதி சரத் அமுனுகம அப்போது கூறியது விடுதலைப் புலிகளைச் சமாளிப்பதற்காக இருப்பினும் இப்போது அவரின் பதிலை நியாயப்படுத்த வேண்டிய ஓர் தேவை ஏற்பட்டுவிட்டது.

அதாவது, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சை இடைக்கால சபைத் திட்டவரைபில் இருந்து ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்த போதிலும், அரசில் அங்கம் பெறும் ஜே.வி.பி. அதனை எதிர்க்கின்றது.

இந்நிலையில், தனது வாக்குறுதியைக் காப்பாற்ற ஜனாதிபதி தனக்கு இருக்கக் கூடியதான சர்வவல்லமை பொருந்திய அதிகாரத்தைப் பிரயோகிப்பாரா?, ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு நிதியமைச்சர் சரத் அமுனுகம பின்னூக்கம் கொடுப்பாரா? இவற்றுக்குக் காலம் தான் பதில்தர வேண்டும்.

# அரசை வீழ்த்துவதோ ஆட்சியைப் பறிப்பதோ எமது நோக்கமல்ல – ஹெல உறுமய விளக்கம்

(கொழும்பு)

ஐககிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை கவிழ்ப்பது தமது நோக்கம் இல்லை என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் எல்லாவல மெதானந்த தேரர் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய அரசை தோற்கடிப்பதற்கோ அல்லது மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்கோ எமது கட்சி எந்தக்குழுவிற்கும் ஆதரவு வழங்கப்போவதில்லை.

ஜாதிகஹெல உறுமய தனது கொள்கையின் அடிப்படையில் நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்கு தொடர்ந்தும் சுயாதீனமாகச் செயற்பட்டு வரும்.

அததுடன், எமது கட்சி எந்த ஒரு கட்சிக்கும் விலைபோகாது தனக்குரிய தனித்துவமான கொள்கைகளுடன் அரசியலில் ஈடுபட்டு வரும்.

பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவருக்கு பொதுமக்களின் கருத்துக்களையும் தனது கருத்துக்களையும பாராளுமன்றத்தில் தெரிவிக்கும் உரிமை இருக்க வேண்டும் என ஜாதிகஹெல உறுமயவின் உயர் பீடத் தலைவர் எல்லாவல மெதானந்த தேரர் கூறினார்:

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பினும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட அவரிற்கு தனது கருத்துக்களைக்கூறும் உரிமை இருப்பதும் அவசியம்.

எனினும் தற்போதைய பாராளுமன்றத்தில் இவ்வாறான ஒரு நிலை இல்லை எனக் குறிப்பிட்டார். (உ-4)

## தொழில் பிணக்குகளை உடன் தீர்த்து வைக்க நடவடிக்கை

(கொழும்பு)

தொழில் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் மூவர் சபைக்கு அதன் தீர்மானங்களை நடைமுறைக்கிடும் ஒழுக்காற்று அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அங்கீகாரம் அளித்துள்ளார்.

இதுவரை காலமும் தொழில் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் மூவர் சபையின் தீர்மானங்கள் தொழில் ஆணையளரின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு வந்தன.

இதனால் தொழில் பிணக்குகளால் பாதிக்கப்பட்டவர்கள் துரிதமாக நட்ட ஈட்டுக்கொடுப்பனவைப் பெறமுடியாதிருந்தனர்.

இந்நிலையில் தொழில் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் மூவர் சபைக்கு அதன் தீர்மானங்களை நடைமுறைக்கிடும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமையால் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உடனடியாக நட்ட ஈட்டை வழங்க முடியும் என சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-60,10)

## பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரிக்கக் குழு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளிற்கு எதிரான முறைப்பாடுகளை ஆராய விசேட விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க தேசிய பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலிஸ் சேவையுடன் தொடர்பற்ற நபர்களே இக் குழுவில் அங்கம் வகிப்பர் என ஜனாதிபதியின் சட்டத்தரணியும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவருமான ரஞ்சித் அபயசூரிய தெரிவித்துள்ளார்.

மகக்ள் மீதான அடிப்படை உரிமை மீறல்கள் மற்றும் துன்புறுத்தல்கள், பக்கச் சார்பான நடவடிக்கைகள் , குற்வாளிகளிற்கு துணைபோதல் உட்பட பலவகையான குற்றச்சாட்டுகள் பொலிஸ் அதிகாரிகள் மீது பொதுமக்களாலும் பொது அமைப்புக்களாலும் சுமத்தப்படுவது அதிகரித்து வருகின்றமையால் இது சம்பந்தமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மேல் நீதிமன்றங்கள் கணனி மயப்படுத்தப்படும்

(கொழும்பு)

நாட்டின் சகல மேல் நீதிமன்ற நடவடிக்கைகளையும் கணனி மயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந் நடவடிக்கையில், வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தல் , ஆவணங்களைப் பாதுகாத்தல்"மற்றும் கோவைப்படுத்துதல் போன்ற பல்வேறு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும் என நீதி அமைச்சர் ஜோன் செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டம் பூர்த்தியாகியதும் ஏனைய நீதிமன்றங்களும் கணனி மயப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

### ௐ தினசரி தியானம்

**விவேகச் சிந்தனைகள்**

**தாழ்ந்த ஓர் உண்மையிலிருந்து உயர்ந்த மற்றோர் உண்மைக்கு மனித குலம் செல்வதாக நீங்கள் கருதலாமேயன்றி, பிழையில் இருந்து உண்மைக்குச் செல்கிறோம் என்று நினைப்பது பொருந்தாது.**

**சுவாமி விவேகானந்தர்.**

## சுற்றுச்சூழல் கலந்துரையாடல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைச் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மு.ப 10.00 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ-75)

**இலஞ்ச ஊழல் ஆ.கு**

## ஆணையாளர் நியமனம் தாமதம் விசாரணை விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு மூன்றாவது ஆணையாளரை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் சம்பந்தமான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதியில் இருந்து மூனறாவது ஆணையாளர் பதவி வெற்றிடமாக உள்ளதனால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

குறிப்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 17 அமைச்சர்களுக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள ஊழல் குற்றச் சாடடுக்கள் குறித்து விசாரணைகளை நடத்த முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதனையடுத்து நீதி அமைச்சர் டி.ஜெ. செனிவிரத்தின மின் சக்தி எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் உள்ளிட்ட 4 பேர் கொண்ட குழுவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார்.

இக்குழுவினரை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இது தொடபாக ஆராய்ந்து விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி மேலும் கேட்டுள்ளார்.

இதற்கிடையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் மூன்றாவது ஆணையாளராக் மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நதியரசர் கே. விக்கினராஜாவை நியமிக்கும் படி பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-60,10)

**மட்டு. மாவட்டத்தில்**

## கைவிடப்பட்ட நிலையில் 2,065 இளம் பெண்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கணவனால் கைவிடப்பட்ட நிலையில் சுமார் 2 ஆயிரத்து 65 இளம் பெண்கள் வாழ்ந்து வருவது அண்மையில் மாவட்ட சமுர்த்திப் பணிமனை மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இதில சுமார் 200 பேருக்கு சுயதொழில் முயற்சிக்கான வாய்ப்பு சமுர்த்திப் பிரிவினரால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 8 இலட்சத்து 25 ஆயிர்ம் ரூபா பெறுமதியான 30 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

(உ)

## மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் மீது விசாரணை

(நுவரெலியா)

மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் வசந்த அலுவிகார மீதான நிதி மோசடிக் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகளை ஜனாதிபதி விசாரணைப் பிரிவு ஆரம்பித்துள்ளது.

இவர் தனது பதவிக்காலத்தில் தனது ஆதரவாளர்கள் பலரை பலதரப்பட்ட பதவிகளிலும் பணிக்கு அமர்த்தியதாகவும், கேள்விப்பத்திரங்கள் கோராமலேயே ஒப்பந்தங்களை வழங்கியதுடன் நிதிக் கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொண்டதாகவும் குற்றம்சாட்டப்பட்டிருக்கிறது.

இதைவிட முச்சக்கரவண்டிகளைப் பதிவு செய்தலில் மோசடிகளைச் செய்திருப்பதாகவும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நிதியைக் கையாடியதாகவும் அலுவிகார மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

(உ-4,61)

# ரொனால்ட் றேகனின் புகழுடல் நேற்று அரச மரியாதைகளுடன் நல்லடக்கம்



(வாஷிங்டன்)

அமெரிக்காவின் 40வது ஜனாதிபதி ரொனால்ட் றேகனின் பூதவுடல் சகல அரச மரியாதைகளுடனும் கலிபோர்னியாவில் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதற்கு முன்னதாக வாஷிங்டன் தேசிய தேவாலயத்தில் நடைபெற்ற பிரமாண்டமான அரச மரியாதைகளுடன் கூடிய இறுதிச் சடங்குகளில் உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

உலகத் தலைவர்கள் அஞ்சலி உரையாற்றுகையில் ரொனால்ட் றேகன் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவர். பனிப்போரில் தார்மீக ரீதியிலான வெற்றியைப் பெற்றவரென்றும் தெரிவித்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அங்கு உரை நிகழ்த்துகையில்,

அமெரிக்காவின் வரலாற்றில் முன்னாள் ஜனாதிபதி றேகனின் காலப்பகுதி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இறுதிச் சடங்குகளைத் தொடர்ந்து றேகனின் பூதவுடல் வாஷிங்டனில் இருந்து கலிபோர்னியாவுக்கு எடுத்து செல்லப்பட்டு அங்குள்ள மலைப் பிராந்தியத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அங்கு இடம் பெற்ற மரியாதை அணிவகுப்பைத் தொடர்ந்து ரொனால்ட் றேகனின் பிரேதப் பெட்டியை மூடியிருந்த கொடி அவரது பாரியார் நான்ஸி றேகனிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-9)

## அக்மீமன...

தியப் பிரமாணம் செய்வதற்குத் தடை விதிக்குமாறும், தனது இராஜிநாமா முறையற்றவிதத்தில் நடைபெற்றது எனக் கோரியும் ரத்னசீல தேரர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இதேவேளை கடந்த செவ்வாய் அன்று பாராளுமன்றில் ஹெல உறுமய எம்.பிக்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ்குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

தற்போது இக் குழுவினர் ஹெல உறுமய எம்.பிக்களான கொலன்னாவே சுமங்கல தேரர், அக்மீமன தயாரத்ன தேரர் ஆகியோரைப் பாரளுமன்றில் தாக்கியமை தொடர்பான விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கேற்ப அமைச்சர்களான ஜீவன்குமாரதுங்கா, சந்திரசேன விஜய்சிங்க, பிரதி அமைச்சர்களான ஸ்ரீபதி சூரியாராச்சி, மிகிந்தானந்த அளுத்கமகே ஆகியோரும் எம்.பி மேவின் சில்வாவும் விசாரணை செய்யப்படவுள்ளனர். (ந-6)

## அமெ.அதிகாரி...

வொன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து குடாநாட்டின் தற்போதய நிலைமைகள் தொடர்பாகவும் அமெரிக்காவின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பகவும் அரச அதிபர் மற்றும் உயரதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தேரரின் இறுதிச் சடங்கு இன்று

(கொழும்பு)

மல்வத்தபீடத்தின் மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய ரம்புக்வெல ஸ்ரீவிபசி தேரரின் மரணச் சடங்குகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு அஸ்கிரிய மைதானத்தில் பூரண அரச மரியாதைகளுடன் நடை பெறவுள்ளன. (உ-60,10)

## குளோரின் இடல்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாளைய தினம் பொதுக் கிணறுகளுக்கு குளோரின் இடல், கட்டாக் காலி நாய்களை அழித்தல் போன்ற நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (த)

## இ.தொ.கா...

னைத் தெரிவித்தார்.

அவர் தொடந்து தெரிவிக்கையில்,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கு சில நிபந்தனைகள் விதித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றதே தவிர உத்தியோக பூர்வமாக அரசுக்கு அந்தக் கட்சி எதனையும் அறிவிக்கவில்லை.

அவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அரசுடன் இணைந்து கொள்வதற்கு நிபந்தனை விதித்தாலும் அந்த நிபந்தனை குறித்து நாம் ஆராயத் தயாராகவே இருக்கின்றோம் என்றார்.

இதேவேளை இலங்கைத் தொழிலாளர் காங்கிஸ் கட்சி இரண்டு அமைச்சுப் பொறுப்புக்களையும் இரண்டு பிரதி அமைச்சர் பதவிகளையும் அரசிடம் கோருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிஸ்கட்சி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தல் முறைகளை மாற்றியமைக்கக் கூடாதென்றும் மேல் கொத்மலைத் திட்டம் கைவிடப்படவேண்டுமென்றும் நிபந்தனைகளை விதிக்குமெனவும் கூறப்படுகின்றது. (உ-10)

## இடைக்கால...

தீர்வை எட்டுவதற்கும் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்குமாகப் பேசுவதையே அரசாங்கம் தனது நிலைப்பாடாகக் கொண்டுள்ளது. எனினும் விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக சபையை வழங்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள்.

இந் நிலையில் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென்ற நோக்கில் அரசு செயற்பட்டுவருவதினால் இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் இப்போது தயாராக இருக்கின்றது.

இனப்பிரச்சினைத் தொடர்பில் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டுள்ள அரசின் ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் நான் தொடர் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளேன். இதில் என்னால் வெற்றி காண முடியுமென நம்புகின்றேன்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் இடைக்கால நிர்வாக சபையொன்றை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதற்கு முதன்முதலில் யோசனை தெரிவித்ததுடன் அதனை அவர்களுக்கு வழங்குவதறகும் தயாராக இருந்தேன்.யுத்தம் ஆரம்பித்ததனால் அப்போது அதனைச் செய்ய முடியாது போய்விட்டது.

தற்போது சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கு சமாதான செயலகம் மீளமைக்கப்பட்டு முழுமையான கட்டமைப்புடன் எனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்குகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான நிகழ்ச்சி நிரலை தயாரிக்குமாறு நோர்வே அரசையும் கேட்டுள்ளேன் என்று ஜனாதிபதி தனது தொலைக்காட்சி உரையில் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## பாராளுமன்ற..

ஆளாகியிருக்கிறார்.சமாதானப் பேச்சுவார்த்தைகளை இடைக்கால நிர்வாகத்தை மையமாக வைத்து ஆரம்பிக்கின்ற போது அது ஐக்கிய தேசியக் கட்சி கடைப்பிடித்த நடைமுறைக்கு வித்தியாசமானது என்று சிங்கள மக்களுக்குக் காட்ட வேண்டிய தொருஇக் கட்டான நிலை ஜனாதிபதிக்கு இருக்கிறது.

ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியின் சமாதான நடைமுறைகள் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் என்று குற்றஞ்சாட்டிய ஜனாதிபதி அதேவழியில் செல்வது முடியாததொன்றாகவே இருக்கும்.

மேலும் இடைக்கால நிர்வாக சபை பற்றி பேசி முடிபுகளை எடுத்தாலும், அதனோடு கூட இறுதித் தீர்வு பற்றியும் பேச வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்துகிறார்.

ஆனால், புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகம் குறித்து முடிபு எட்டப்பட்டாலும், பாராளுமன்றத்தில் சட்டமொன்று கொண்டு வரப்படாமல் அதனை நடைமுறைப்படுத்த முடியுமா? என்பது பெரியதொரு சந்தேகமே.

இதனை விடுதலைப் புலிகள் ஏற்கனவே உணர்ந்து கொண்டமையினாலேயே ஐக்கிய தேசியக் கட்சியுடனான சமாதானப் பேச்சுவார்த்கைளில் இடைக்கால நிர்வாகத்தை இறுக்கிப் பிடிக்காமல் வேறு கட்டமைப்புக்களை உருவாக்க முன்வந்திருந்தனர். ஆனால், அத்தகைய கட்டமைப்புக்களும் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை.

மேலும் கடந்த கால சமாதானப் பேச்சுக்களைப் போன்று காலத்தை இழுத்தடிக்கும் நிலைமைகள் தொடரும் அபாயம் இருப்பதாகவும் விடுதலைப் புலிகள் உணருகின்றனர். இதனால் இறுதித் தீர்வு பற்றி இப்போது பேசுவதில்லை என்ற தமது நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகள் இறுக்கமாகவுள்ளனர் என்றும் அவர் கூறினார். (த)


## சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

அரச யாழ்.தெழிநுட்பக் கல்லூரியில் பயிற்சியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கும், கிளிநொச்சி மாவட்ட தொழிநுட்பக் கல்வி நிறுவனத்தில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கும் ஏனைய தொழிநுட்ப வல்லுநர்களுக்கும் உலக நாடுகள் 102 இனால் அங்கீகரிக்கப்பட்ட இங்கிலாந்து **City & Guilds** சான்றிதழ் பெறும் வாய்ப்பு

City & Guilds

அரச யாழ்.தொழிநுட்பக் கல்லூரி, கிளிநொச்சி மாவட்ட தொழிநுட்பக் கல்வி நிறுவனம் ஆகியவற்றில் பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கும் ஏனைய தொழிநுட்ப வல்லுநர்களும் இலங்கையில் இருந்து நேரடியாக **London City & Guilds** நிறுவனத்தினால் நடாத்தப்படும் செய்முறைப் பரீட்சையில் தோற்றி சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு தற்போது யாழ்.தொழிநுட்பக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செய்முறைப் பரீட்சையை மேற்கொள்வதற்கு ஏதுவாக குறுகிய காலப் பயிற்சியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது யாழ்.தொழிநுட்பக் கல்லூரியில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

| | செயன்முறை பரீட்சைக் காலம | பயிற்சிக் கட்டணமும் பரீட்சைக் கட்டணமும் | City & Guilds சான்றிதழ் கட்டணம் |
|---|---|---|---|
| மின்னிணைப்பு (Electrical Installation) | 24 hrs | Rs 3864.00 | £ 16 |
| உலோக இயந்திரவியல் (Matal Mechining) | 40 hrs | Rs 3645.50 | £ 22 |
| மரவேலை தொழிநுட்ப பயிற்சி (Timber Vocation) | 32 hrs | Rs 5934.00 | £ 16 |
| பொருத்துதல், மற்றும் குழாய் வேலைகள் (Fabrication,Welding and Pipe Work) | 96 hrs | Rs 7670.50 | £ 22 |
| கட்டுமான வேலை (Masonary) | 32 hrs | Rs 5589.00 | £ 16 |
| குழாய் நீர் அமைத்தல் (Plumbing) | 16 hrs | Rs 4209.00 | £ 16 |

விண்ணப்பப்படிவங்களை யாழ்.தொழிநுட்பக் கல்லூரி அலுவலகத்தில் பெற்று 30-06-2004 க்குமுன்பாக தொழிநுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும் படி வேண்டப்படுகின்றீர்

**குறிப்பு:-**

பயிற்சி மற்றும் பரீட்சைக்கான கட்டணங்களை ஹற்றன் நஷனல் வங்கியின் நகரக் கிளை **(HNB City office)** கணக்கு இல.002-0741376ல் செலுத்திப் பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் இணைக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு அணுகுங்கள்: திணைக்களம்/கல்லூரி

இலங்கை தொழிநுட்பக் கல்லூரி அல்லது

யாழ்ப்பாணம் **021-2225409**/மட்டக்களப்பு-**065-2246557**/ திருகோணமலை-**026-2223034**

**City & Guilds** நிறுவனம்

6 மாடி **Access** கட்டடம் 278, யூனியன் பிளேஸ், கொழும்பு-02

தொலைபேசி (011)-5361427/8

தொலை நகல்: **srilanka@city-and-guilds.co.uk** வெப் தளம்:**www.cityandguilds.com**

(C-229)



JAFFNA JAIPUR CENTRE DISABILITY REHABILITATION

## ஜெய்ப்பூர் நிறுவன பயனாளிகளுக்கான எழுத்தாற்றல் போட்டிகளும், மாபெரும் விளையாட்டு விழாவும்

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தனது 17வது ஆண்டு நிறைவை ஒட்டி தனது பயனாளிகளுக்கான கவிதை, கட்டுரை, சிறுகதைப்போட்டிகளையும் எதிர்வரும் யூலை மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை விளையாட்டுப் போட்டியினையும் நடாத்த உள்ளது .

கவிதை, கட்டுரை, சிறுகதை ஆக்கங்கள் வலுவிழந்தோரின் பாதிப்புகள், அனுபவங்கள், உணர்ச்சிகள் ,மறுவாழ்வு போன்றவற்றை கருப்பொருளாகக் கொண்டிருக்கவேண்டும். குறைந்தது 300 சொற்களுக்கும் , கூடியது 500 க்கும் இடைப்பட்டதாக அமைதல் வேண்டும். ஆக்கங்கள் யூலை மாதம் 5ஆம் திகதிக்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள எமது பயனாளிகள் எதிர்வரும் யூலை மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக எமது காரியாலயத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும். முச்சக்கரவண்டி, சைக்கிள் ஓட்டம், தடகளப் போட்டிகளில் கலந்து வலுவிழந்தோரின் தனித்திறமைகளை சமூகத்துக்கு வெளிக்காட்டி பாராட்டுக்களையும், பரிசில்களையும் பெற்று மகிழுமாறு அன்புடன் கேட்டுகொள்கின்றோம்.

முகாமைத்துவக்குழுவினர்

இல.05, பழைய பூங்கா் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.